வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 17.02.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 70 | பக்கங்கள் : 16

# மின்சார கட்டணம் ஜூலையில் மாறும்!

## மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 17

செலவுக்கு ஏற்ற மின்சார கட்டண திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனவே, வருடத்தில் ஜனவரி, ஜூலை என இரு தடவைகள் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப் படும். இதன்படி வரும் ஜூலையில் மின் கட்டணம் திருத்தப்படும் என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித் துள்ளார்.

15

## பெண் கொலை; சந்தேகநபர் கைது!

சாதி குறிப்பிட்டு பேசியமையால் ஏற் பட்ட கோபத்தால் பெண்ணை தாக்கிக் கொன்றேன் என்று அத்தியடியில் குடும் பப் பெண் கொலை சந்தேகநபர் பொலி ஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு யாழ்ப் பாணம் மாநகரின் அத்தியடி பகுதியில் 55 வயது பெண் ஒருவர்

15

## மின் கட்டண உயர்வுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பேன்!

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, பெப். 17

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் எஞ்சிய உறுப்பினர்களை தவறான வழியில் சந்தித்து, சட்ட விரோதமாக உயர்த் தப்பட்ட மின்சாரக் கட்டணத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் தலைவர் ஜானக ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து ஸூம் செயலி ஊடாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கட்டண அதிகரிப்புக்கு நான் அங்கீகாரம்

15

## 250சிறார்கள் வருடாந்தம் புற்றுநோயால் மரணம்!

கொழும்பு, பெப். 17

நாட்டில் வருடாந் தம் புற்றுநோயால் 250 சிறார்கள் மரணிக் கின்றனர் என்று தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவு

15

### தேர்தலுக்கான நிதியை விடுவித்தல்:

## தேர்தல் ஆணைக்குழுவினருடனான பேச்சை புறக்கணித்தது திறைசேரி

கொழும்பு, பெப். 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை விடு விப்பது தொடர்பான பேச்சில் திறைசேரியின் அதிகாரிகள் பங்கேற்க வில்லை.

தேர்தல் ஆணைக்குழு வின் அழைப்பின்பேரில், நேற்று வியாழக்கிழமை ஆணைக்குழுவின் பணி மனையில் நடைபெறுவ தாக இருந்த இந்தப் பேச்சில் திறைசேரியின் செயலர் மற்றும் அதி காரிகள் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி

15

### மின் கட்டண அதிகரிப்பு எதிரொலி:

## ஏனைய பொருட்களின் விலைகளும் உயர்ந்தன



யாழ்ப்பாணம், பெப். 17

மின்சார கட்டணம் 66 வீதம் அதிகரித்ததைத் தொடர்ந்து நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சமைக் கப்பட்ட உணவுகள், வெதுப்பக உற்பத்திகள், அச்சு மற்றும் நகல் பொருட் கள் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மின்கட்டண உயர்வுக்கு அமைய உணவகங்களில் கொத்து ரொட்டி, ப்றைட்

15

## ரூ. 300 கோடி வழங்கினால் தேர்தலை நடத்திவிடலாம்!

### யாழ். வந்த தேர்தல் முன்னாள் ஆணையாளர்



யாழ்ப்பாணம், பெப். 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு மதிப்பிடப்பட்டுள்ள செலவில் தேர்தலுக்கு முன்னர் 300 கோடி ரூபாய் வழங்கப்பட்டால் ஆணைக்குழுவால் தேர்தலை நடத்த முடி யும். அவ்வாறில்லை என் றால் மாத்திரமே குறுகிய காலத்துக்கு தேர்தலை ஒத்திவைக்கும் நிலைமை ஏற்படும் என்று முன் னாள் தேர்தல் ஆணை யாளர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

15

## குளிரால் கால்நடைகள் இறப்பு; இழப்பீடாக ரூ. 3 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு, பெப். 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மண்டூஸ் சூறாவளி தாக்கத்தால் ஏற்பட்ட குளிர் தாக்கத்தால் உயிரிழந்த கால்நடை களுக்கு இழப்பீடாக 3 கோடி ரூபாயை விவசாய அமைச்சு ஒதுக்கியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் மண்டூஸ் சூறாவளி தாக்கத்தால் ஏற்பட்ட குளிர் காலநிலையால் வடக்கு மாகாணத்தில் 514 மாடுகளும் 630 கன்றுகளும் 305 ஆடுகளும் 144 குட்டிகளும் உயிரிழந் தன. இதேபோல கிழக்கு மாகாணத்தில் 423 மாடுகளும் 299 கன்றுகளும் 65 ஆடுகளும் 45 குட்டிகளும் இறந்தன.

இதற்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க 3 கோடி ரூபாய்க்கான காசோ லையை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கால்நடை திணைக்களத்தின் மேலதிக செயலரிடம் கையளித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாயும் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு கோடியே 19 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின் கட்டணம் அதிகரிப்பு ‘ஹர்த்தால்’ நடத்த திட்டம்!

### பெற்றோல், மின் துறை சேவை சங்கம்

கொழும்பு, பெப். 17

மின் கட்டண அதி கரிப்புக்கு எதிரான போராட்டத்தில் 74 இலட்சம் மின்சார பாவ னையாளர்கள் ஒன்றி ணைய வேண்டும். நாட ளாவிய ரீதியில் ஹர்த் தால் நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து அவதானம் செலுத்தியுள் ளோம் என்று பெற் றோலியம் மற்றும் மின் சாரம் ஆகிய துறைகளின் ஒன்றிணைந்த சேவை சங் கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

மின்கட்டண அதி கரிப்பு தொடர்பில் வின விய போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டு மக் கள் பொருளாதார ரீதி யில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது நாட்டு மக்களுக்கு

15

## 13ஆம் திருத்த சட்டத்தை தமிழர்கள் கேட்கவில்லை

### ஞானசார தேரர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 17

“வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் 13ஆவது அரசி யல் திருத்தம் ஊடான அதி காரங்களைக் கேட்கவில்லை”, என்று கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

டான் தொலைக்காட்சி குழு மத்தின் சிங்கள ஒளிபரப்பான ‘யாழ்’ தொலைக்காட்சியின் ‘தராதிய’ அரசியல் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

13ஆவது அரசமைப்பு திருத் தம் என்பது வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் அதி காரத்தை வழங்கும் வகையிலா னது அல்ல. மாறாக நாட்டின் அனைத்து பிரதேசத்துக்கும் உரியதான விடயமாகும். வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் 13ஆவது அரசியல் திருத்தம் ஊடான அதிகாரங் களை கேட்கவில்லை. மாறாக தங்கள் பிரதேசங்களில் தாங்கள் எதிர்நோக்கும்

15



# இப்படியும் நடக்கிறது...!

அந்தச் செய்தி வெளியாவதற்கு முன்னரே ஐரோப்பாவில் சில இணையத்தளங்கள் இப்படியொரு செய்தி வெளிவரவிருக்கின்றது என்ற செய்திகளை முன்கூட்டியே தெரிவித்துவிட்டன.

தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வைத்து இப்படியோர் அறிவிப்பை விடுப்பதற்காக பழ. நெடுமாறனும் காசி ஆனந்தனும் சென்னையில் இருந்து தஞ்சாவூருக்கு சென்றுகொண்டிருக்கின்றார்கள் என்று அந்தச் செய்திகள் முன்கூட்டியே தெரிவித்தன.

அவர் சொல்லியிருப்பது ஓர் அப்பட்டமான பொய் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான் என்றாலும் ஏன் இப்படியொரு பொய்யை இப்போது சொல்கிறார்கள் என்பது பற்றியே தமிழ் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் பட்டிமன்றங்கள் நடந்துகொண்டிருந்தன.

அதனை செய்தியாக்கி அந்த விவாதங்களை சூடேற்றாமல் விட்டுவிடுவது என்று 'ஈழநாடு' தீர்மானித்திருந்ததோ தெரியவில்லை. அதனால் அதனைக் கண்டுகொள்ளாமலே விட்டுவிட்டிருக்கலாம். அதனைச் செய்தியாக்குவதெனில், ஏன் நெடுமாறன் இதுபோன்ற பொய்யை சொல்கிறார் என்றே செய்தி வெளியிட்டிருக்க வேண்டும். அது எதற்காக என்பது தெரியாததால் அதனைத் தவிர்ப்பது நல்லது என்று கருதியிருக்கலாம்.

ஆனால், அதுபற்றிய செய்தி வெளிவராததைக் கண்ட ஒருவர், தன்னை 'ஈழநாடு'வின் தீவிர வாசகன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு ஒரு மின் அஞ்சல் அனுப்பியிருந்தார்.

அதனை கீழே முதலில் தருகின்றேன்.

'உள்ளூரிலும் தமிழ் கூறும் நாடுகளிலும் மிகப்பரவலாக ஒலித்த விடயம் நெடுமாறனின் பேட்டி.

முக்கிய தமிழ், ஆங்கில, சிங்கள பத்திரிகைகளில் எல்லாம் அது பற்றிய செய்திகள் தான். 'ஈழநாடு' ஆசிரியர் பீடம் வேறொரு கிரகத்தில் வசிக்கிறீர்கள் போலும். ஒரு செய்தி என்பது வாசகர்களால் ஆர்வமாக வாசிக்கப்படுவது. உங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அது பிரசுரிக்கப்பட வேண்டும்.

அது மக்களுக்கு சென்று சேர்ந்துவிடக்கூடாது என்ற எண்ணமா?

பூனை கண்ணை மூடிக் கொண்டு இருந்து உலகமே இருண்டு விட்டது என்று நினைத்த கதையை 'ஈழநாடு'ம் செய்ததை ரசிக்க முடியவில்லை."

இதுதான் அந்த வாசகரின் குறிப்பு.

வாசகர்கள் ஆர்வமாகப் படிக்கவேண்டும் என்பதற்காக நடிகர் விஜயின் காதல் கிசுகிசுக்களையும் எழுதலாம்தான். ஆனால், 'ஈழநாடு' அப்படிச் செய்வதில்லை.

இந்த வாசகர் அந்தச் செய்தியை அப்படியே நம்பிவிட்டார் என்று கருதுவதா அல்லது அவரே சொல்வது போல பூனை கண்ணை மூடிக் கொண்டு இந்த உலகமே இருண்டுவிட்டது என்று நினைப்பதுபோல அவரின் கருத்தையும் எடுப்பதா என்பது தெரியவில்லை.

இந்தச் செய்தி கிடைத்ததும் இதுதொடர்பாக ஐரோப்பாவிலுள்ள சிலருடன் ஊர்க்குருவி பேசியது. அப்போது கிடைத்த தகவல்கள் ஆச்சரியத்தை தந்தன. இது இன்று நேற்றல்ல கடந்த ஆண்டு நவம்பரிலேயே முளை விடத் தொடங்கிவிட்டதாம்.

தலைவர் இருக்கிறார், அவரின் பாதுகாப்புக்கான செலவுக்கு என்று நிதி திரட்டல்கள் தொடங்கிவிட்டன. அவரின் மகளும் மனைவியும் இருக்கின்றனரெனவும் சில இடங்களுக்கு முக்கியமாக சில தமிழீழ உணர்வாளர்களான வர்த்தகர்களிடம் இவர்தான் மகள் என்று ஒருவர் அழைத்துச் செல்லப்பட்டாரெனவும்கூட தெரியவந்தது.

இப்போது, அதன் உச்சக் கட்டமாக நெடுமாறனும் காசி ஆனந்தனும் அவர்களுக்கு உதவியிருக்கின்றனர்.

இதுதான் அவரை வைத்து நடக்கும் பிழைப்புவாதம் என்றால், வடக்கில் அடுத்த தலைவர் என்று நம்பப்படுகின்ற சிவஞானம் சிறீதரன் எம். பியோ இதுபற்றி உங்கள் கருத்து என்ன என்று ஊடகர் ஒருவர் கேட்ட போது, "எந்தவித சமூக பொறுப்பும் இன்றி தலைவர் வருவார் என்ற அந்த நல்ல செய்தியை கனத்த இதயத்தோடு காத்திருக்கின்றோம்", என்கிறார்.

அது என்ன கனத்த இதயம். அவர் வரவிருக்கின்ற செய்தி உங்களுக்கு இதயத்தைக் கனக்க வைக்கின்றதா? என்று அந்த ஊடகர் கேட்காதவரை அவர் தப்பித்துக்கொண்டார்.

மகிழ்ச்சியிலும் இதயம் கனக்கத்தான் செய்யுமோ தெரியவில்லை.

அவர் இல்லையென்றாலும் அவர் இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு மாத்திரமல்ல, உலகம் எங்கும் பலருக்கு தொடர்ந்து உதவிக்கொண்டுதான் இருக்கிறார்.!

- ஊர்க்குருவி

# வடக்கு புகையிரதப் பாதை திட்டம் விரைவுபடுத்தப்படும்!

கொழும்பு, பெப். 17

அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான வடக்கு புகையிரதப் பாதை அபிவிருத்தி பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மேலும் விரைவுபடுத்தப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமாக இது உள்ளது. போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் வழிகாட்டலின் கீழ் இந்திய கடன் திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த அபிவிருத்தி திட்டத்தை அடுத்த சில மாதங்களில் முழுமைப்படுத்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ஐ)

# சப்ரகமுவா பல்கலை. மாணவர்கள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 17

சப்ரகமுவா பல்கலைக் கழகத்தின் முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த அனைத்து மாணவர்களும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட முதலாம் வகுப்பு மாணவர்களுக்கும், இன்னுமொரு குழுவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் 9 மாணவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதையடுத்தே, முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த அனைத்து மாணவர்களும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளதாக பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகா சிவராத்திரி திருவிழாவுக்காக அர்ஜூன் சம்பந்த் இலங்கை வருகை!




யாழ்ப்பாணம், பெப். 17

வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்றதுமான திருக்கேதீச்சரம் ஆலய மகா சிவராத்திரி திருவிழாவில் பங்கேற்க இந்தியாவின் இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் பங்கேற்கவுள்ளார்.

இதற்காக நேற்று வியாழக்கிழமை இலங்கை வந்த இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் தலைமையிலான குழுவினரை ஈழம் சிவசேனை அமைப்பினர் வரவேற்றனர். (ஐ)

## ரத்நாயக்கவின் பணிமனைக்கு 'சீல்'

கொழும்பு, பெப். 17

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்கவின் அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் பேரிலேயே அவரின் பணிமனைக்கு பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை சீல் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு - கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரின் பணிமனைக்கே இவ்வாறு பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முல்லைத்தீவுக்கு மகிந்த கண்காணிப்பு பயணம்!

முல்லைத்தீவு, பெப். 17

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

இந்த கண்காணிப்பு பயணத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் தேவராசா ஹென்ஸ்மன், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜசிந்தன், மாவட்ட புள்ளிவிபரவியலாளர் இ. இராஜசூரி முதலானோருடன் அவர் எல்லை நிர்ணயம் தொடர்பாகக் கலந்துரையாடினார். (ஐ)

## முன்னாள் அமைச்சர் பஸ்நாயக்க காலமானார்!

கொழும்பு, பெப். 17

இலங்கையின் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் பந்துல பஸ்நாயக்க கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று காலமானார்.

1980களில் அரசியலில் பிரவேசித்த பந்துல பஸ்நாயக்க 1994 - 2000ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார்.

2004-2010 காலப்பகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர், சுற்றாடல் மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சராகவும் பணியாற்றினார். அதேநேரத்தில் அவர் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அல்லாத அமைச்சராகவும் பணியாற்றினார்.

முன்னாள் அமைச்சர் பந்துல பஸ்நாயக்கவின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை குருநாகல் - கல்கமுவவில் இடம்பெறவுள்ளது.

# விஜயகுமாரதுங்கவின் 35ஆவது நினைவேந்தல்!

கொழும்பு, பெப். 17

மறைந்த நடிகரும் அரசியல்வாதியுமான விஜயகுமாரதுங்கவின் 35ஆவது நினைவுதினம் நேற்று காலை சீதுவையில் அமைந்துள்ள அவரின் சமாதி அருகில் நினைவுகூரப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியும் விஜயகுமாரதுங்கவின் பாரியாருமான சந்திரிகா குமாரதுங்க கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் கலைஞர்கள், விஜயகுமாரதுங்கவின் ஆதரவாளர்கள், ரசிகர்கள், மதத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

விஜயகுமாரதுங்க 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Eelanadu ஈழநாடு
16.02.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பரபரப்பரசியல்?

தமிழ்த் தேசிய அரசியலில் பரபரப்பிற்கு குறைவில்லை. ஆனால், புத்திசாதுர்யத்திற்கும் தந்திரோபாயத்திற்கும்தான் மோசமான பஞ்சம் நிலவுகின்றது. விடுதலைப் புலிகளுக்கு பின்னரான காலமென்பது பெரும்பாலும் பரபரப்பிலும் செயலற்ற கனவுகளுக்குமான காலமாகவே கழிந்திருக்கின்றது. இதன் காரணமாகத்தான் பதின்மூன்று ஆண்டுகளுக்கு பின்னரும் பிரபாகரன் வருவாரென்று எவரோ கூற அதனை முன்வைத்து விவாதம் செய்யும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கதைகளை புனைவோருக்கு நோக்கங்கள் இருக்கலாம் - ஆனால், அவ்வாறான கதைகளின் அடிப்படையில் விவாதம் செய்பவர்கள்தான் இங்கு பிரச்னைக்குரியவர்கள். ஒரு வகையில் இவ்வாறான கதைகளை கூறுபவர்களை விடவும் அதனை முன்வைத்து கதைகள் புனைய முற்படுவர்கள்தான் ஆபத்தானவர்கள்.

இன்னொரு புறம் வேறுவிதமான பரபரப்புக் காட்டுவோர் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றனர். எதற்கெடுத்தாலும் சீனா, இந்தியா, அமெரிக்கா என்று கதைகள் சொல்லும் போக்கொன்று மேலோங்கியிருக்கின்றது. சாதாரணமான விடயங்களுக்கெல்லாம் புவிசார் அரசியல் விளக்கங்கள் கூறுகின்றனர். உண்மையில் ஒரு மிகவும் சிறிய தேசிய இனத்தின் ஆற்றலுக்கு மிகவும் அப்பால்பட்ட விடயங்களை சாதாரணமாகப் பேசுகின்றனர். இதன் மூலம் தமிழர்களுக்கு போலித்தனமான நம்பிக்கையூட்டப்படுகின்றது.

இப்போது அடிக்கடி சிலர் பொதுசன வாக்கெடுப்பு தொடர்பில் பேச முற்படுகின்றனர். அண்மையில், பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட பேரணியின் இறுதியிலும் அவ்வாறானதொரு கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு தாங்கள் பேசுவதன் தார்ப்பரியங்கள் தெரியாது. அவர்களுக்குப் புத்தி புகட்டவேண்டிய அறிவுள்ளவர்களோ விடயங்களின் உண்மைத்தன்மையை உணர்த்தாமல் - அவர்களைத் தவறாக வழிநடத்த முற்படுகின்றனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைவதற்கான பொதுசன வாக்கெடுப்பைக்கூட இன்றுவரையில் நடத்த முடியவில்லை. இந்த நிலையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான பொதுசன வாக்கெடுப்பை எவ்வாறு நடத்த முடியும்? ஒரு பொதுசன வாக்கெடுப்பு என்பது, குறித்த நாட்டின் அங்கீகாரத்துடன்தான் நடத்த முடியும். சர்வதேச சட்டத்தில் சில ஏற்பாடுகள் இருந்தாலும்கூட உலக ஒழுங்கு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. உதாரணமாக அண்டை நாடான இந்தியாவின் ஓர் அங்கமான காஷ்மீரின் சுயநிர்ணயத்திற்காக பொதுசன வாக்கெடுப்பு கோரிக்கை பல தசாப்தங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் ஐ. நா. பாதுகாப்பு பேரவையில் 1947இல், தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதனடிப்படையில், காஷ்மீர் இந்தியாவோடு அல்லது பாக்கிஸ்தானோடு இணைவதா என்பதை தீர்மானிக்க முடியும். அதற்கான வாக்கெடுப்பை சுதந்திரமாக நடத்துவதற்கு இரு தரப்பும் இணங்க வேண்டுமென்று குறித்த பிரேரணை கூறுகின்றது. ஆனால், இன்றுவரையில் அதனை நிறைவேற்ற முடியவில்லை. இந்தியா அதனை அனுமதிக்கவில்லை. எனவே, பொதுசன வாக்கெடுப்பென்பது - ஒரு சிலர் அவ்வப்போது உச்சரிப்பதுடன் - ஓர் ஆர்பாட்டத்தில் உச்சரிப்பதுடன் முடிந்துவிடும் விடயமல்ல. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் காணப்படும் பரபரப்பு காண்பிக்கும் மோகம் அறிவை உதாசீனம் செய்துவிடுகின்றது. புத்தி புகட்டவேண்டியவர்களும்கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் சறுக்கிவிடுகின்றனர். இதனால், தடி எடுத்தவரெல்லாம் தண்டல்காரர் என்பது போல் அனைவரும் அரசியல் மேதைகளாகிவிடுகின்றனர். தமிழ் மக்களோ போகுமிடம் தெரியாமல் பரபரப்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி திருவிழா!



*மன்னார், பெப். 17*

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலைமுமான மன்னார் திருக்கேதீச்சர பெருமான் ஆலயத்தின் மகா சிவராத்திரி நாளை சனிக்கிழமை காலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முதலாம் சாமப் பூசை அன்று இரவு 8 மணிக்கும் இரண்டாம் சாமப் பூசை இரவு 10.30 மணிக்கும் மூன்றாம் சாம இலிங்கோற்பவ பூசை நள்ளிரவு 12.15 மணிக்கும் நான்காம் சாமப் பூசை பின்னிரவு 3 மணிக்கும் நடைபெற்று தொடர்ந்து அதிகாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து ஞாயிறு அதிகாலை சுவாமி பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருவார்.

சிவராத்திரியையொட்டி ஆலய வெளிவீதியில் அமைக்கப்படும் பிரமாண்ட அலங்கார மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இதில் தமிழக மற்றும் இலங்கை கலைஞர்களின் ஆன்மீக உரைகள் மற்றும் பண்ணிசைக் கச்சேரி என்பன நடைபெறவுள்ளன.

## சிவராத்திரி தின சொற்பொழிவுகள்

*யாழ்ப்பாணம், பெப். 17*

மகா சிவராத்திரி தினமான நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தின் ஆலயங்களில் சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்க மைப்பில் இந்த சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவிலின் பிரதான மண்டபத்தில் சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு சைவப்புலவர் செ. த. குமரன் "சிவ சிவ என்றிடச் சிவகதி தானே" என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றுவார்.

• • •

புன்னாலைக்கட்டுவன் - திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தில் சனிக்கிழமை இரவு 9 மணிக்கு சைவப்புலவர் ச. நவநீதன் 'சிவராத்திரி மகிமை' எனும் தலைப்பில் சொற்பொழி வாற்றுவார்.

• • •

அச்செழு வடக்கு - நீர்வேலி வல்லியப்பர் சிவன் தேவஸ்தானத்தில் நாளை மாலை 6.00 மணிக்கு மாணவர்களின் கலை நிகழ்வுகளை தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "சிவ விரதங்களில் சிவராத்திரி" எனும் தலைப்பில் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து, சுழிபுரம் அம்பாள் வில்லிசை குழுவினர் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' வில்லிசையும் ஊரெழு கானலய நுண்கலையக மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

• • •

குப்பிழான் சொக்கவளவு அங்கயற்கண்ணி உடனாய திருவாலவாயர் திருக்கோவிலில் நாளை இரவு 8.00 மணிக்கு இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் "சிவனுக்கு உகந்தது சிவராத்திரி" எனும் தலைப்பில் சொற்பொழி வாற்றுவார்.

• • •

ஊர்காவற்துறை - நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணிக்கு சைவப்புலவர் செ. த. குமரன் "சிவராத்திரி விரத மகிமை" என்னும் தலைப்பில் சொற்பொழி வாற்றுவார். (ஐ)

## 'அணுவைத் துளைத்து' நூல் வெளியீட்டு விழா!

*யாழ்ப்பாணம், பெப். 17*

அணு விஞ்ஞானி பேராசிரியர் வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளையின் 'அணுவைத் துளைத்து...' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை பிரமஸ்ரீ பஞ்சாட்சர சர்மா சிவானந்த சர்மாவும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் பரமு புஷ்பரட்ணமும் ஆற்றவுள்ளனர். (ஐ)

## மருதடி விநாயகர் திருவிழா தொடர்பான கூட்டங்கள்!


*யாழ்ப்பாணம், பெப். 17*

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பெருந்திருவிழா தொடர்பாக உபயகாரர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு பெருந்திருவிழா முன்னேற்பாடு தொடர்பான கூட்டம் நடைபெறும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி யு. யசோதா அறிவித்துள்ளார்.

இந்த இரு கூட்டங்களும் ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | |
|---|---|
| பெப்ரவரி - 17 | வெள்ளிக்கிழமை |
| சுபகிருது வருடம் - | மாசி 05 |
| நல்ல நேரம் : | 09.00 - 10.30 |
| ராகு காலம் : | 10.30 - 12.00 |
| திதி : | துவாதசி |




**மேடம்**
இரண்டு நாட்கள் இழுபறியாக இருந்த முயற்சி இன்று நிறைவேறும். பண வரவு மகிழ்ச்சி தரும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னை நீங்கும்.

**இடபம்**
புதிய முயற்சி இழுபறியாகும். எதிர்பாராத பிரச்னைகளால் சங்கடம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் நெருக்கடி உண்டாகும். அலுவலகப் பணியில் திடீரென்று பிரச்னை தோன்றி மறையும்.

**மிதுனம்**
நம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும். லாபத்திற்குரிய வழிகள் தோன்றும்.எதிர்ப்புகள் விலகும்.

**கடகம்**
பண வரவில் ஏற்பட்ட தடை விலகும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு வரவேற்பு உண்டாகும். எதிர்பாராத லாபம் காண்பீர்கள்.

**சிம்மம்**
தொழிலில் லாபமும் முன்னேற்றமும் ஏற்படும். குடும்ப நிலையை உயர்த்த முயற்சிப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். குடும்ப சொத்தில் இருந்த பிரச்னை முடிவிற்கு வரும்.

**கன்னி**
தாய்வழி சொந்தங்கள் தேடி வருவர். அரசியல் பிரமுகர்களால் அனுகூலம் ஏற்படும். வரன்தேடியவர்களுக்கு நல்ல தகவல் வரும். நண்பர்கள் ஒத்துழைப்பால் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உங்கள் அறிவால் நிதிநிலையில் உயர்வு உண்டாகும். நண்பர்கள் உதவியால் அரசு வழியில் நீங்கள் எதிர்பார்த்தவை நிறைவேறும்.

**விருட்சிகம்**
உங்களை விட்டு விலகிச் சென்ற வாடிக்கையாளர் மீண்டும் உங்களைத் தேடி வருவர். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். எதிர்பார்த்த பணம் வரும். மகிழ்ச்சிகரமான நாள்.

**தனுசு**
மனதில் குழப்பம் ஏற்படும். உங்கள் பிரச்னைகளை மற்றவர்களிடம் கொண்டு செல்ல வேண்டாம். ஒரு சிலர் உங்களை சீண்டுவர். அவர்களை கண்டு கொள்ள வேண்டாம். அமைதி தேவை.

**மகரம்**
திடீர் செலவுகளால் இருப்பு கரையும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. கடன் கொடுத்தவர்களால் ஒருசிலர் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். அவசர வேலைகளை போராடி முடிப்பீர்கள்.

**கும்பம்**
வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மற்றவர் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். உங்கள் எண்ணம் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி லாபமாகும். உங்களுடைய நேற்றைய எண்ணம் இன்று நிறைவேறும். உறவினர் ஒருவரின் பிரச்னையைத் தீர்த்து வைப்பீர்கள்.

# கடலில் வாள்வெட்டு தாக்குதல் ஆறு தமிழக மீனவர்கள் காயம்

நாகபட்டினம், பெப். 17

கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இனந் தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில், 6 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன், இந்த மீனவர்களிடம் இருந்து 5 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்புள்ள மீன்கள் மற்றும் வலைகளை பறித்து செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையை சேர்ந்த கடற்கொள்ளையர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தச் சம்பவம், தமிழ்நாடு மீனவரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

நாகை மாவட்டம் நம்பியார் நகர் மீனவ கிராமத்தை சேர்ந்த முருகன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 14 ஆம் திகதி அதே பகுதியைச் சேர்ந்த 6 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். புதன்கிழமை நள்ளிரவு கோடியக்கரை இந்திய எல்லையில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது அங்கு 4 படகுகளில் வந்தவர்கள், தமிழக மீனவர்களை சுற்றிவளைத்து கத்தி, கட்டை உள்ளிட்டவையால் தாக்கியுள்ளனர்.



தொடர்ந்து தமிழக மீனவர்களின் படகில் இருந்த மீன்கள், ஜி. பி. எஸ். கருவி, கைபேசிகள், தூண்டில் வலைகள் உள்ளிட்ட 5இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்பிலான பொருள்களை கொள்ளையடித்து கொண்டு தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# ஈரோடு இடைத்தேர்தல் நியாயமாக நடத்தப்படும்!

சென்னை, பெப். 17

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நியாயமாக நடத்தப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் பதிலளித்துள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு பெப்ரவரி 27ஆம் தேதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதில், போட்டியிடும் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே, வாக்காளர்களுக்கு ஆளும் கட்சியினர் பணம் வழங்கினர் எனவும், வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்துள்ளதாகவும் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் அ. தி. மு. க. எம். பி., சி.வி. சண்முகம் தொடரப்பட்ட வழக்கில் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் அளித்த தெரிவித்த தாவது:

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்தப்படும். கள்ள வாக்கு போடுவதை தடுக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இரட்டைப் பதிவு கொண்ட வாக்காளர்களின் பட்டியலை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 409 மத்திய காவல் படை வீரர்களும், பறக்கும் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தங்களால் செய்ய முடிந்ததை சிறப்பாக செய்வதாக தெரிவித்துள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் விளக்கத்தை ஏற்று, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எழுத்துபூர்வமாக அறிக்கை அளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை பெப்ரவரி 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (ஐ)

# தி. மு. க., அ. தி. மு. கவின் தேர்தல் பணிமனைகளுக்கு ஈரோடில் 'சீல்'!

சென்னை, பெப். 17

ஈரோடு கிழக்கு தொகுதியில் செயல்பட்டு வந்த தி. மு. க., அ. தி. மு. க. பணிமனைகளுக்கு தேர்தல் அதிகாரிகள் நேற்றுக் காலை சீல் வைத்தனர்.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலை முன்னிட்டு அந்த தொகுதிக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளில் அரசியல் கட்சிகள் பணிமனை அமைத்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், அனுமதியின்றி செயல்படுவதாக எழுந்த முறைப்பாட்டையடுத்து, ஈரோடு கிழக்கு தொகுதியில் செயல்பட்டு வந்த தி. மு. கவின் 10 பணிமனைகள், அ. தி. மு. கவின் 4 பணிமனைகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் சீல் வைத்தனர்.

துப்பாக்கி ஏந்திய துணை இராணுவத்தினருடன் பணிமனைக்கு சீல் வைக்க வந்த தேர்தல் அதிகாரிகளுடன் அ. தி. மு. கவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பான சூழல் நிலவியது. (ஐ)

# 'தமிழைத் தேடி' பயணம் 21ஆம் திகதி ஆரம்பம்!

சென்னை, பெப். 17

தமிழ் மொழியை காப்பதற்காக 'தமிழைத்தேடி...' என்ற தலைப்பில் பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ச. ராமதாஸ் சென்னை முதல் மதுரை வரை பரப்புரை பயணம் செய்யவுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் 'எங்கும் தமிழ்... எதிலும் தமிழ்...' என்பதுதான் ஒரு காலத்தில் முழக்கமாக இருந்தது. ஆனால். இன்று எங்கே தமிழ்? என்று கேட்கும் நிலை உருவாகியிருக்கிறது.

கோவில்களில், உயர்நீதிமன்றில், வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளில், வீடுகளில், தாய்க்கும் சேய்க்குமான உரையாடல்கள் என எதிலும் தமிழ் இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையினரின் விருப்பமாகவும் நோக்கமாகவும் உள்ளது.

பரப்புரை பயணம் தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்றும் வகையில், அழிவின் விளிம்பிலிருந்து அன்னைத் தமிழை மீட்டெடுக்க வேண்டும். - என்றுள்ளது. (ஐ)

# தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக கொழும்பை முடக்குவதற்கு திட்டம்!

## திங்களன்று மக்களை திரட்ட ஏற்பாடு

கொழும்பு, பெப். 17

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடும் திட்டத்துக்கு எதிராக நாடு முழுவதிலும் உள்ள மக்களை எதிர்வரும் திங்கட்கிழமை தலைநகருக்கு வரவழைக்கவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் கீழ்த்தரமான திட்டம் தோற்கடிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து பொதுச் செயற்பாட்டாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் தாங்கள் தோற்றுப் போவதை அறிந்து தோல்வியைத் தவிர்க்க விரும்புவதால் தேர்தலை ஒத்திவைப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலை நடத்தும் வரை பின்வாங்கப் போவதில்லை எனவும், தேர்தலை நடத்தாவிட்டால் நல்லதோ கெட்டதோ பிரச்னையை தீர்க்க தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணிக்கு போதியளவு பாதுகாப்பு இல்லை!

கொழும்பு, பெப். 17

பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்து பொலிஸ் உயர் அதிகாரிகள் விலகியுள்ளதால், வாக்குச் சீட்டு உள்ளிட்ட தேர்தல் அச்சிடும் நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு 60 பேர் கொண்ட பொலிஸ் குழுவொன்று கோரப்பட்டபோதிலும், மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே வழங்கப்பட்டுள்ளதாக அரச அச்சக திணைக்களத்தின் அச்சகர் கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

உரிய பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டமை தொடர்பில் தொழிலாளர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுகளை மீள எண்ணி சான்றிதழ் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு போதிய பாதுகாப்பை வழங்க தேர்தல்கள் ஆணைக்குழு தலையிடுமாறு அரசாங்க அச்சக அதிகாரி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# தேர்தல் திகதியில் மாற்றம் ஏற்படாது

கொழும்பு, பெப். 17

தபால் மூல வாக்குகள் விநியோகிக்கும் திகதி மாறினாலும் தேர்தலை நடத்தும் திகதியில் மாற்றம் ஏற்படாது என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொய்யான காரணங்களைக் காட்டி தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் முயற்சியை முறியடித்து மக்களின் இறையாண்மையை பாதுகாக்கவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# கம்பளை ஏ.ரி.எம். கொள்ளைச் சம்பவம் நால்வர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்

கொழும்பு, பெப். 17

கம்பளை நகரில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றின் ஏ.டி.எம் இயந்திரத்துடன் பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் கைதானவர்களில் நான்கு பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

கைதான 7 பேரில் ஒருவர் கம்பளை நீதவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய ஆறு பேரையும் 48 மணிநேர தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பளை நகரில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் இருந்து கொள்ளையிடப்பட்ட ஏ.ரி.எம் இயந்திரம் மற்றும் அதன் பாகங்கள் கலஹா - ஹல்வத்த பகுதியில், சுமார் 200 அடி பள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்போது, 18 லட்சத்து 70 ஆயிரம் பணமும் கொள்ளையிடப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கார், மோட்டார் சைக்கிள், இரண்டு தங்க சங்கிலிகள், சலவை இயந்திரங்கள், கையடக்கத் தொலைபேசி, தங்க மோதிரம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, இவர்கள் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி கலஹா பகுதியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றை கொள்ளையிட்டு அதன் பண வைப்புப் பெட்டகத்தை கடத்திச் செல்ல முயற்சித்துள்ளனர்.

எனினும், அந்த முயற்சி தோல்வி அடைந்ததுடன் நிதி நிறுவனத்தில் இருந்த ஏனைய சில பொருட்களை கொள்ளையிட்டு சென்றிருந்தனர்.

அத்துடன் குறித்த குழுவினரால் இரண்டு தங்க ஆபரண நிலையங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

(அ)

# ஜனாதிபதியோ பிரதமரோ அழுத்தம் கொடுக்கவில்லை!

## அரசாங்க அச்சகர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, பிரதமர் தினேஷ் குணவர்தனவோ தமக்கு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என அரசாங்க அச்சகர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுவது தொடர்பில் ஜனாதிபதியும், உள்ளூராட்சி மன்ற அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தனவும் அழுத்தங்களை பிரயோகித்தனர் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என அரசாங்க அச்சகர் தெரிவித்தார்.

வாக்குச்சீட்டு அச்சிடுவது குறித்து பேசுவதற்காக தாம் ஜனாதிபதிச் செயலகத்துக்கு செல்லவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு தேவைகளுக்காக தாம் ஜனாதிபதி செயலகத்துக்கு செல்வதாகவும், அவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை தொடர்புபடுத்தி இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# கொரிய மொழி பரீட்சையில் இம்முறை 3,950 பேர் தேர்ச்சி!

கொழும்பு, பெப். 17

2022 ஆம் ஆண்டுக்கான 6 ஆவது கொரிய மொழி பரீட்சையின் இரண்டாம் கட்டத்தில் 3950 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 04 ஆம் திகதி முதல் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி வரை மெய்நிகர் வழியில் இந்த பரீட்சைகள் நடத்தப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

உற்பத்தித்துறை தொடர்பான குறித்த கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைக்கு 18, 269 பேர் தோற்றியிருந்தனர்.

இந்த பரீட்சை பெறுபேறுகளை slbfe.lk எனும் இணையதளத்தில் பார்வையிட முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை மற்றும் மருத்துவ சோதனைக்கு வர வேண்டிய தினம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்றத்தை கூட்டுமாறு எம்.பிக்கள் பிரதமருக்கு கடிதம்

கொழும்பு, பெப். 17



பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோரி சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடனான கடிதம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தின் பிரதிகள் சபாநாயகர், எதிர்க்கட்சியை அங்கத்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சுதந்திர மக்கள் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வாக்கு சீட்டு விநியோக பணிகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டமை நாட்டின் ஜனநாயக்கத்துக்கு கடும் அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளதாக அந்தக் கடித்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உரிய வாக்கு சீட்டுக்களை விநியோகிப்பதற்காக திறைசேரி நிதி வழங்காமை ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நிலுவைப் பணத்தை வழங்காவிட்டால் யாழில் வர்த்தக கண்காட்சி நடத்த அனுமதிப்பதில்லை

## யாழ்.மாநகரசபையில் நேற்று தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 17

சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் யாழ். மாநகர சபைக்கு வழங்க வேண்டியுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று யாழ். மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில், முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடை பெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இந்த விவாத்தின்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி, மற்றும் இதர கட்டணமாக சுமார் 39 இலட்சம் ரூபா செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில், 2023 ஆம் ஆண்டு கண்காட்சியை நடத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலுவையைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகள் எதனையும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# சர்வதேச சமூகத்தை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது சீனாவின் கடன்

கொழும்பு, பெப். 17

**கடனைத் திருப்பிச் செலுத்துவதில் இரண்டு வருட கால அவகாசத்தை மாத்திரமே சீனா வழங்கியுள்ள மையானது இலங்கையையும் உலக சமூகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.**

எனினும் இந்தியா, ஜப்பான் போன்ற கடன்கொடுனர்கள் 10 வருட கால கடன் இரத்தையும் 15 வருடக்கால மறுசீரமைப்பை யும் வழங்கியுள்ளன.

இந்த நிலையில், குறிப்பாக சீனாவிடம் கடனைப் பெற்றுள்ள ஆபிரிக்க நாடுகள், தமது அச்சத்தை வெளியிட்டுள்ளதாக ஏ.என்.ஐ செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஆட்சிக் கவிழ்ப்பு என்பன ஆபிரிக்க நாடுகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையை தளமாகக் கொண்ட டெய்லி பினான்சியல் ரைம்ஸின் கூற்றுப்படி, சீன எக்ஸிம் வங்கியின் நிலுவையில் உள்ள கடன் 4,023 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே.

எனினும் இலங்கை மேலும் 3,000 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவுக்கு செலுத்தவேண்டியுள்ளது.

இதில் 2,950 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனா டெவலப்மென்ட் வங்கிக்கு செலுத்தவேண்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு, மியான்மர் மற்றும் பல ஆபிரிக்க நாடுகளுக்கு ஒரு பாடமாகும்.

சீனாவை பொறுத்தவரை, பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான அதன் பட்டுப்பாதை முயற்சிக்காக பல நாடுகளுக்கும் பாரிய கடன்களை வழங்கியுள்ளது.

2012 முதல் 2017 வரை, ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளுக்கு சீன கடன்கள் ஆண்டுக்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந்த நிலையில் குறைந்த வருமானம் கொண்ட 22 ஆபிரிக்க நாடுகள் ஏற்கனவே கடன் நெருக்கடியில் உள்ளன அல்லது கடன் நெருக்கடியில் அதிக ஆபத்தில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2000 மற்றும் 2020 க்கு இடையில் ஆபிரிக்காவின் மொத்த வெளிநாட்டுக் கடன் ஐந்து மடங்கு அதிகமாக அதிகரித்து 696 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது என்றும் ஏ.என்.ஐ தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஆபிரிக்க நாடுகளுக்கான 'கடன் பொறியை' தாம் உருவாக்கியுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது. (அ)

# 1,055,000 சுற்றுலாப்பயணிகள் இவ்வருடம் இலங்கை வருவர்

கொழும்பு, பெப். 17

2023 ஆம் ஆண்டில் 10 இலட்சத்து 55 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள், இலங்கை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் 2 இலட்சத்து 60 ஆயிரம் இந்திய சுற்றுலாப்பயணிகள் இலங்கை வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்ணான்டோ தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 545 பேர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் 18 ஆயிரம் பேர் இலங்கை வந்துள்ளனர்.

2019ம் ஆண்டு கோவிட்-19 பரவல் ஏற்படுவதற்கு முன்னர், இலங்கைக்கு 1.9 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் வந்தனர்.

அந்த ஆண்டில் இந்தியாவிலிருந்து 3 இலட்சத்து 55 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்ததாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்ணான்டோ குறிப்பிட்டார். (அ)

# அஞ்சல் மூல வாக்களிப்பு குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்

கொழும்பு, பெப். 17

இந்த வாரத்தின் இறுதிக்குள் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான வாக்குசீட்டுக்கள் கிடைக்கப்பெற வில்லையாயின், அடுத்த வாரம் அஞ்சல் மூல வாக்களிப்பு குறித்த தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அஞ்சல் மூல வாக்களிப்புக்கான திகதியை மாற்றுவது குறித்து இதுவரையில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அஞ்சல் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் கிடைக்கப் பெற வில்லையாயின் அதற்கான திகதியை மாற்றுவது தொடர்பில் தீர்மானிக்கப் படும்.

இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் வாக்குசீட்டு அச்சிடல் பணிகளுக்கான நிதி வழங்குமாறு அரச அச்சகமா அதிபரால் கோரப்பட வில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார். (அ)

# தாவடியில் பூட்டப்பட்டிருந்த வாகனத் திருத்தகத்தில் தீ!



யாழ்ப்பாணம், பெப். 17

தாவடி வன்னிய சிங்கம் வீதியில் உள்ள வாகன வேலைத்தளம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வாகன வேலைத்தளம் எரிந்து நாசமாகியுள்ளதோடு வேலைத் தளத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பட்டா ரக வாகனமும் முழுமையாக எரிந்துள்ளது.

வேலைத்தளத்தில் ஏற்பட்ட மின்ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக் கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (அ-03)

# வாக்கு சீட்டுக்களை அச்சிடுவது அரச அச்சகத்தின் கடமையாகும்

கொழும்பு, பெப். 17

முன்னர் எந்த சந்தர்ப்பத்திலும் வாக்கு சீட்டுக்களை அச்சிடுவதற்காக நிதி வழங்குமாறு அரச அச்சகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டதில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இதனை தெரிவித்தார்.

அரசின் பங்குதாரராக அரச அச்சகமும் செயற்படவேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே அதற்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிட வேண்டியது அரச அச்சகத்தின் கட்டாய செயற்பாடு என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இதனால், இந்த முறை வாக்கு சீட்டு அச்சிடுவதற்காக நிதி கோருகின்றமை ஏற்றுக் கொள்ள முடியாத செயற்பாடாகும் என அந்த ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# உள்ளூராட்சி தேர்தலை நடத்தாவிடின் நாட்டில் ஜனநாயக நெருக்கடி ஏற்படும்

கிளிநொச்சி, பெப். 17

நாடு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில் உள்ளூராட்சி தேர்தலையும் நடத்தாதுவிடின் அது ஜனநாயக நெருக்கடியையும் ஏற்படுத்தும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்-

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களைத் திட்டமிட்ட காலத்தில் நடத்தவேண்டும். அதுவே மக்களின் ஜன



நாயக உரிமைகளை மதித்துப் பாதுகாப்பதாக அமையும். அதுவே மக்களுடைய எதிர்பார்ப்புமாகும்.

தற்போது வெளிவரும் செய்திகள் தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வியையும் குழப்பத்தையும் மக்களிடையே உண்டாக்கியுள்ளன. அரசியலமைப்பின் பிரகாரம், மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்குண்டு. அதனை மறுக்கும் அல்லது தாமதப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கமுடியாதவையாகும்.

நாடு அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதன் மூலம் ஜனநாயக நெருக்கடியையும் உருவாக்கக்கூடாது. ஜனநாயகச் சூழலை மேம்படுத்துவதன் மூலமே மக்களின் உரிமைகளைப் பேணுவதுடன் அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் மீளமுடியும் - எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மியன்மார் சென்றார் கோட்டா!

கொழும்பு, பெப். 17

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன் தினம் நள்ளிரவு நாட்டை விட்டுவெளியேறினார் என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் மியன்மாருக்கு 10 நாள் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு நாட்டை விட்டுச் சென்றுவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மியன்மாரில் உள்ள பல சமூக ஆர்வலர் அமைப்புகளின் அழைப்பின் பேரில், முன்னாள்




ஜனாதிபதியின் மனைவி அயோமா ராஜபக்ஷ மற்றும் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோர் இந்த விஜயத்தில் இணைந்துள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது. (அ)

# யாழ்ப்பாண கலாசார நிலையத்தை தமிழ் மக்களிடமே வழங்கவேண்டும்

## ஜனாதிபதியிடம் விக்னேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17

**யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை தமிழ் மக்களிடமே வழங்கவேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இந்திய அரசின் நிதி உதவியில் யாழில் அமைக்கப்பட்ட கலாசார நிலையம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண கலாசார மண்டபம் தமிழ் மக்களுக்கென்று இந்தியாவால் வழங்கப்பட்டது.

ஆகவே அதனை பராமரிப்பது, கலாசார நிகழ்வுகளை நடத்துவது என அனைத்தும் தமிழ் மக்களிடம்தான் இருக்க வேண்டும். அவர்கள் கையில் முழுப் பொறுப்பும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து மத்திய அரசாங்கம் அதற்கு ஒரு குழு அமைத்து தானே செயற்படுத்துவது அல்லது வைத்திருப்பது முறையானது அல்ல. அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இந்த மத்திய நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கும்பொழுது நான் முதலமைச்சராக இருந்தேன். அப்பொழுது இது மாகாண சபைக்கு வருமென்று தான் எதிர்பார்த்திருந்தோம். இப்பொழுது மாகாண சபை வலுவில் இல்லாதபோது அதை மாநகர சபைக்காவது கொடுக்கவேண்டும்.

அதேவேளை, ஐந்து வருடகாலத்திற்கு அதற்குரிய செலவுகளை தருவதாக இந்தியா கூறியிருப்பதால் எங்கள் மாநகர சபையே இதை கொண்டு நடத்தலாம் என்று நம்புகிறேன்.

இது எந்த விதத்திலும் தமிழ் மக்களின் கைகளில் இருந்து மத்திய அரசாங்கத்துக்கு போவதை நான் விரும்பவில்லை. அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கிறேன். இதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுப்பார் என்று நம்புகிறேன்.

எனினும் இந்த விடயத்தை முழுமையாக பரிசீலித்து தமிழ் மக்கள் தங்கள் கலாசார மண்டபத்தை தாங்களே பாவிக்க கூடிய வகையிலும் பராமரிக்கக் கூடியதான சந்தர்ப்பத்தை கொடுக்கவேண்டுமென்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (அ)

# இந்திய இழுவை படகுகளினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு!

## இந்திய துணைத் தூதருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 17

இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதி மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்குமாறு கோரி, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரனால், யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் உள்ளதாவது, காரைநகர் கடற்பிரதேசத்தில் கடந்த வாரம் 3 மீனவர்களுடைய 11 இலட்ச பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டு முழுமையாகச் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த சம்பவத்துக்கு இந்திய மீனவர்கள் பொறுப்பாளிகள் என பாதிக்கப்பட்ட மீனவர்களும் கடற்தொழிலாளர் சங்க தலைவரும் தெரிவிக்கின்றார்கள்.

இந்திய தமிழக உறவுகளுக்கும் எமக்கும் உள்ள புரிந்துணர்விலும், உறவிலும் இது விரிசலை ஏற்படுத்துவதால் இது சம்பந்தமாக உரியவர்களிடம் தெரிவித்து தீர்வை காணுமாறும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

(அ)

# கப்ராலுக்கு விதித்த பயணத்தடை நீடிப்பு

கொழும்பு, பெப். 17

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை நீடித்து நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்பு கூறவேண்டும் எனவும் அதன் காரணமாக அவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறும் கோரி முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோனினால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யாழ். மாநகர சபையின் அமர்வில் அநாகரிகமான சொற்பிரயோகம்!

## வெளியேற்றப்பட்டார் உறுப்பினர்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாநகர சபை அமர்வில் வைத்து அநாகரிகமான சொற்பிரயோகத்தை உபயோகித்த மாநகர சபை உறுப்பினரொருவர் வெளியேற்றப்பட்டார்.

யாழ். மாநகர சபையின் அமர்வு நேற்று மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மாநகர சபை உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி "வைக்கோல் பட்டறை நாய் போன்று சிலர் செயல்படுகின்றனர்" என கூறியுள்ளார். இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டுள்ளது.

அதாவது குறித்த உறுப்பினர், சபை அமர்விலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என உறுப்பினர்கள் முதல்வரிடம் கேட்டுக்கொண்டனர்.

நீங்கள் என்னை வெளியேற்றவேண்டாம். நானே வெளியேறி செல்கின்றேன் என உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி தெரிவித்து விட்டு வெளியேறியுள்ளார்.

குறித்த உறுப்பினருடைய அநாகரிகமான சொற்பிரயோகம் பதிவு செய்யப்படும் எனவும், சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக அவர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார் எனவும் யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவித்தார்.

இந்நிலையில் உறுப்பினருக்கு இந்த மாதத்துக்கான கொடுப்பனவும் ரத்து செய்யப்படுகிறது எனவும், இந்த ஒரு மாதத்தில் சபையின் செயற்பாடுகளுக்கு அவர் அனுமதிக்கப்படமாட்டார் எனவும் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தைத்த ஆடைகளின் விலைகளை 20 வீதத்தால் அதிகரிக்கும் நிலை!

கொழும்பு, பெப். 17

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து தைத்த ஆடைகளின் விலையையும் 20 வீதத்தால் உயர்த்த வேண்டியுள்ளதாக ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர சட்டவிரோதமான முறையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துள்ளதாகவும் இது முழு தொழிற்துறைக்கு பாரிய பிரச்னை எனவும், இதனால் தொழில் துறை வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(அ)

# அரிசி, உருளைக்கிழங்கு பருப்பு விலை குறைப்பு!

கொழும்பு, பெப். 17

நேற்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச மேலும் 6 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கு 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 375 ரூபாவாகும்.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 149 ரூபாவாகும்.

இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி ஒரு கிலோ 7 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 198 ரூபாவாகும்.

ஒரு கிலோ சிவப்பு பருப்பும் 7 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 358 ரூபாவாகும்.

ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு அரிசி 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 164 ரூபாவாகும்.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசி ஒரு கிலோ 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 179 ரூபாவாகும். (அ)

# மின்சாரக் கட்டணம் அதிகரிப்பினால் உணவுப்பொதி, கொத்து விலை உயர்வு!

கொழும்பு, பெப். 17

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் அனைத்து தொழிற்சாலை உற்பத்திகளின் விலைகளும் நூற்றுக்கு 20 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மின் கட்டண அதிகரிப்பினால் சோறு பொதி, ப்ரைட் ரைஸ், மற்றும் கொத்து ஆகியவற்றின் விலையானது நூற்றுக்கு 10 வீதம் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அப்பம் உள்ளிட்ட ஏனைய கோதுமை உணவு பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது என அவர் மேலும் கூறினார்.

(அ)

# துருக்கியை சூழ்ந்த துயரம்!

முனைவர்
வைகைச்செல்வன்

துருக்கி - சிரியாவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் இரு நாடுகளிலும் நேற்றுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படு காயமடைந்துள்ளனர். இந்த கொடும் நிகழ்வு நெஞ்சை அறுக்கிறது. கிழக்கு துருக்கியின் காஸியன்டெப் நகரை மைய மாகக் கொண்டு பிப்ரவரி 6 அன்று அதி காலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.8 அலகாகப் பதிவா கியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் துருக்கியின் 10 மாகாணங்கள் மற்றும் அண்டை நாடான சிரியாவின் வடக்கு பகுதியில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. பெரிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து துருக்கி - சிரியாவில் அடுத்தடுத்து 312 முறை சிறிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 4 அலகு முதல் 7.5 அலகு வரை பதிவாகியுள்ளது.

துருக்கி ராணுவம், காவல்துறை, தீய ணைப்புப் படை அனைத்தும் இரவு, பகலாக மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சிரியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. சிரியா அரசின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் ஓரளவு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், கிளர்ச்சிப் படையின் கட்டுப் பாட்டில் இருக்கும் பகுதிகள் பேரழிவில் இருந்து மீள முடியாமல் தவித்து வருகின் றன. இந்த எதிர்பாரா நிலநடுக்கம் அந் நாடுகளை நிலைகுலையச் செய்து விட்டது.

துருக்கியில் இடிந்து விழுந்த ஐயாயி ரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்களில், குடியிருப்பாளர்கள் நிறைந்த பல அடுக்கு மாடி வீடுகளும் அடங்கும். காஸியன் டெப், சிரியா நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் பாதிப்புகள் மிக அதிகம். இந்த மிகப்பெரும் நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பே ஒருவர் கணித்திருக்கிறார். டச்சு ஆராய்ச்சியாளர் ப்ராங்க் கூகர்பீட்ஸ் என் பவர் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்படும் என்று மூன்று நாட்களுக்கு முன்பே கணித்து, அதை பெப்ரவரி 3-ஆம் திக தியே தனது ட்விட்டர் பக்கத்தில் பதி விட்டுள்ளார்.

அவர் தனது ட்விட்டர் பதிவில், மத்திய மற்றும் தெற்கு துருக்கி, ஜோடான், சிரியா, லெபனான் ஆகிய பகுதிகளைக் குறிப்பிட்டு 7.5 ரிக்டர் அலகு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று வரை படத்துடன் குறிப்பிட்டிருந்தது முக்கிய மான ஒன்றாகும். அவர் கணித்ததைப் போலவே துருக்கி - சிரியாவில் 7.8 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டு விட்டது.

துருக்கியில் இதுவரை ஏற்பட்ட நில நடுக்கங்களிலேயே மிகவும் மோசமான நிலநடுக்கம் இதுதான் என்று கூறப்படுகி றது. கனமழை ஒருபக்கம், கடுமையான பனிப்பொழிவு மற்றொரு பக்கம் என்று இருக்கிற சூழ்நிலையில் மீட்பு பணி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உறையும் குளிருக்கு நடுவே சாலையில் முகாம் அமைத்து தங்கியுள்ள குடும்பத்தி னர் மீண்டும் தங்கள் வீடுகளுக்குச் செல் லவே அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு சிரியாவில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக் கான சிரியா அகதிகள், முகாம்களில் தங்கி உள்ளனர். இந்தப் பகுதியின் கட்டுப்பாடு, சிரியா அரசாங்கம், குர்தீஷ் படையினர், புரட்சிக்குழுக்கள் என்று மூன்று தரப்பி னரிடம் உள்ளது. நிலநடுக்கத்துக்கு முன்பே உறைய வைக்கும் குளிர், காலரா தொற்றுநோய், மோசமான உள்கட்ட மைப்பு ஆகியவற்றால் சிரியா மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை ஐ.நா. சபை கவனத்தில் கொள்ள வேண் டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் கோருகிறார்கள்.

சிரியாவில் உள்ள ஜின்டெரிஸ் பகுதி யைச் சேர்ந்த ஒருவர் தன் குடும்பத்தினர் 12 பேர் இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்த தாகக் கூறினார். கட்டட இடிபாடுகளுக் கிடை அவர்களின் குரல் கேட்டது, அவர் கள் உயிருடன்தான் இருந்தார்கள், ஆனால் காப்பாற்ற யாரும் இல்லை என்று தெரி வித்தார். ஐ.நா.சபையின் பொதுச்செய லாளர் அன்டோனியா குட்டெரஸ் சர்வ தேச நாடுகளுக்கு உதவி கோரி அழைப்பு விடுத்திருக்கிறார்.

அந்த அழைப்பை ஏற்று உலக நாடுக ளின் உதவிக்கரம் நீண்டு கொண்டிருக்கி றது. இந்தியா சார்பில் அனுப்பி வைக்கப் பட்ட இரு விமானங்களில் எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர்கள், பொது அறுவை சிகிச்சை மருத்துவர்கள் என 99 பேர் அடங்கிய அபத்து கால மருத்துவக் குழு வினர் சென்றுள்ளனர். மேலும், நிவாரண முகாம்களுக்கான பொருள்களும், மருந் துகளும் அனுப்பப்பட்டுள்ளன. பேரழி வால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் உதவிகளைப் பெறுவதில் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த நிலை யில், அப்பகுதியில் மனிதாபிமான உதவி கள் தேவை என்று தெரிவிக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் பேரிடர் மீட்பு குழுக்களை அனுப்பி உள்ளது. நெதர் லாந்து மற்றும் ரோமானியாவைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் துருக்கிக்கு சென்றுள்ளனர். பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் உதவி செய்வதாக அறிவித்துள்ளன. ரஷிய அதி பர் புதின் துருக்கி - சிரியா நாடுகளுக்கு தாராளமாக உதவுவதாக அறிவித்துள் ளார்.

உலக அளவில் அதிக முறை நிலநடுக் கம் ஏற்பட்டிருக்கிற நாடுகளுள் ஒன்று துருக்கி. அந்த நாட்டின் வடமேற்குப் பகுதியில் 1999-ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 14 ஆயிரத்துக்கும் அதிக மானோர் பலியாயினர். கிழக்கு மாகாண மான எர்ஸின்கன் பகுதியில் 1939-ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 33ஆயிரம் பேர் உயிரிழந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம் சைப்ரஸ், லெபனான், இஸ்ரேல் வரை உணரப்பட்ட மிக மோசமான பாதிப்பாகும்.

அறிவியலின் துணைகொண்டு, நிலந டுக்கம் எந்தப் பகுதியில் ஏற்படக்கூடும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடிந் தாலும் நிலநடுக்கம் எப்போது ஏற்படும் என்பதை கணிக்க இயலாத நிலையே உள்ளது. இதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டு இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நிலநடுக்கம் ஏற்படப்போவதை அறி யமுடிந்தாலும் கூட, அதனைத் தடுப்ப தற்கு இயலாது என்பதுதான் உண்மையா கும். இது குறித்து ஆய்வு செய்த நிபுணர் கள் 'நிலநடுக்கம் எப்போது ஏற்படும் என்று கணிப்பது எளிதல்ல. ஆதலால், நீங்கள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்' என்று கூறுகின்றனர். பூகம் பத்தை எதிர்கொள்வதற்கான திட்டத்தை நாம் எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

டாக்டர் ஸ்டீபன்ஹிக்ஸ் 'அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் நீங்கள் வசிக்கிறீர்கள் என்றால், அவசரத் தேவைக்கு உங்கள் வீட்டில் எப்போதும் ஒரு பையைத் தயாராக வைத்திருக்க வேண்டும். அந்தப் பையில் டார்ச் லைட், முதலுதவிப் பெட்டி இருக்க வேண்டும்' என்கிறார். மேலும் செஞ்சிலுவை சங்கத் தினர், 'மக்கள் கொஞ்சம் பணத்தையும், மருந்து சீட்டுகளையும் எப்போதும் தயா ராக எடுத்து வைத்திருக்க வேண்டும்' என்று கூறுகிறார்கள்.

அமெரிக்க நாட்டின் அறிவியல் அமைப்பான 'யுனைடட் ஸ்டேட்ஸ்' கூற் றுப்படி, நிலநடுக்கம் ஏற்படும்போது, நாம் இருக்கும் இடத்திலேயே இருந்தால், காயம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. அதனால் நிலநடுக்கம் ஏற்படும் போது தப்பிப்பதற்காக ஓர் இடத்திலி ருந்து மற்றோர் இடத்துக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று புவியியல் ஆய்வு மையம் அறிவுறுத்துகிறது.

நம்மை பத்திரமாக வைத்துக் கொள் வதற்கான ஒரே வழி கீழே படுத்து நம் கால்களைக் கட்டிப்பிடித்துக்கொள்வது தான் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். உங்களை மறைப்பதற்கு மேஜை இருந் தால் அதன் கீழ் ஒளிந்துகொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்கிறார்கள்.

பூகம்பம் ஏற்பட்டால் தப்பிக்கும் வழி களில் ஒன்று கதவுக்கு மிக அருகில் இருப் பது. ஆனால், பழைய வீட்டில் இருப்ப வர்கள் கதவுக்கு அருகே செல்லாமல் மேஜைக்கு அடியில் ஒளிந்து கொள்வதே நல்லது என்று கூறுகிறார்கள். நிலநடுக்கம் ஏற்பட்டால் வீட்டின் ஜன்னல், பால்கனி தான் பெரும்பாலும் முதலில் விழுகின்றன. அதனால், இத்தகைய ஆபத்தான இடங்க ளில் இருந்து மக்கள் விலகி இருக்க அறி வுறுத்தப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர், இடிந்து விழும் அபாயத்தில் இருக்கும் கட்டடத்தில் இருந்து வெளியில் வந்து விடுவது பாதுகாப்பானது என்று கூறுகி றார்கள். அப்படியானால், வெளியில் இருக்கும் போது என்ன செய்ய வேண் டும் என்று கேட்டால், நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏனெனில், கட்டடங்களில் இருந்து தப்பித்து ஓடுவது மக்களுக்கு காயம் ஏற் படக்கூடிய அபாயத்தை அதிகரிக்கிறது. ஆகவே, முற்றிலும் திறந்த பகுதிக்குச் செல்வதுதான் சிறந்தது. கட்டடங்களோ, மின்கம்பங்களோ இல்லாத இடத்துக்குச் செல்ல வேண்டும். நிலநடுக்கத்தைக் கணிக்க பூமிக்குள் இருந்து சமிக்ஞை தேவைப்படுகிறது.

ஒரு பெரிய நிலநடுக்கம் வரவிருக்கி றது என்று எச்சரிக்கை செய்ய ஒரு கருவி தேவைப்படுகிறது. ஆனால், அத்தகைய கருவி கண்டுபிடிக்கப்படவில்லை. நில நடுக்கம் குறித்து முன்னறிவிப்பு செய்யும் கருவி இல்லை என்பது வேதனை அளிக் கக் கூடிய ஒன்றாகும். நிலநடுக்கம் என் பது பூமிக்கு அடியில் உள்ள பகுதி அசை வதால் ஏற்படும் கடுமையான அதிர்வா கும்.

யூ.எஸ்.ஜி.எஸ். கூற்றுப்படி, பூமியின் இரண்டு தொகுதிகள் திடீரென்று ஒன்றை யொன்று கடந்து செல்லும் போது இது நிகழ்கிறது. இது செஸ்மிக் அலைகள் வடிவில் சேமிக்கப்பட்ட எலாஸ்டிக் ஸ்ட்ரெய்ன் ஆற்றலை வெளியிடுகிறது. அது பூமியில் பரவி நிலத்தை அதிர வைக்கிறது. பூமியின் வெளிப்பரப்பு மேல் ஓடு டெக்டோனிக் தட்டுகளாக உள்ளது. தட்டுகளின் விளிம்புகள், தட்டு எல்லை கள் என்று அழைக்கப்படுகின்றன.

டெக்டோனிக் தகடுகள் எப்போதும் மெதுவான வேகத்தில் நகர்கின்றன. தட் டுகள் ஒன்றையொன்று மோதிச் செல் கின்றன. தட்டுகளின் விளிம்புகள் மிகவும் கடுமையாக இருப்பதால், மற்ற தட்டுகள் நகரும் போது அவை ஒன்றோடு ஒன்று சிக்கிக் கொள்கின்றன. இவ்வாறு தட்டு கள் வேகமாக நகர்ந்து செல்லும் போது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

நிலநடுக்கம் தொடங்கும் பூமியின் மேற்பரப்புக்கு கீழே உள்ள இடம் ஹைப் போசென்டர் என்றும், பூமியின் மேற்ப ரப்பில் அதற்கு நேர் மேலே உள்ள இடம் எபிசென்டர் என்றும் அழைக்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு சொல் லொணா துயரத்தோடு தவித்துக் கொண் டிருக்கும் மக்களின் வேதனைக்கொரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். ■



# பிச்சையெடுக்கச் சுதந்திரம்?

நிலாந்தன்

“நான் பேசப்போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப்பெறுவது பற்றியே நான் பேசப்போகிறேன்” இப்படிப் பேசியிருப்பவர் நாட்டின் ஜனாதிபதி. நடந்து முடிந்த சுதந்திர தின விழாவில் அவர் ஆற்றிய உரை அது. நாங்கள் சுதந்திரத்தை இழந்து விட்டோம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். இதை எப்பொழுது கூறுகிறார்? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகளின் பின் கூறுகிறார். ஆயின், 2009 ஆம் ஆண்டு ராஜபக்ச சகோதரர்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா?

ராஜபக்சக்கள் யாருக்காக நாட்டை மீட்டுக் கொடுத்தார்களோ, அந்த மக்களே இப்பொழுது நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தனது உரையில் ரணில் குறிப்பிடுகிறார். அதன் பின் நான்கு நாட்கள் கழித்து நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையிலும் அவர் அதைக் குறிப்பிடுகிறார். நாட்டை விட்டுப் போகாதீர்கள் என்று. அண்மையில் முகநூலில் ஒரு மூத்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளரின் மகன் ஒரு பதிவைப் போட்டிருந்தார். தான் சந்திக்கும் பெரும்பாலான நண்பர்கள் எப்படி நாட்டை விட்டு வெளியேறலாம் என்பதைப் பற்றியே கதைக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் வசித்த ஒரு ஊடகவியலாளர் சொன்னார், அக்கால கட்டத்தில் ஒன்றில் சாலை கடற்கரையை அல்லது வங்கக் கடலைப் பார்த்தபடி எந்த வழியால் தப்பி போகலாம்? எப்பொழுது தப்பி போகலாம்? என்று சிந்தித்ததை ஒத்த நிலைமை இது. அக்கால கட்டத்தில் பெரும்பாலான பொதுமக்கள் தப்பிப்போவதைப் பற்றியே சிந்தித்தார்கள். 13 ஆண்டுகளின் பின் இப்பொழுது நாடு முழுவதும் அந்த நிலைமை வந்திருக்கிறது.

ஆயின், ராஜபக்சக்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே?அல்லது அது சுதந்திரமே இல்லையா? அதைச் சாப்பிட முடியாதா? அதை வைத்து உழைக்க முடியாதா?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ராஜபக்சக்கள் தோற்கடித்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்தெந்த நாடுகளிடம் கையேந்தினார்களோ அந்த நாடுகளிடம் நாட்டில் ஏதோ ஒரு பகுதியை அல்லது ஏதோ ஒரு வளத்தை இழந்து விட்டார்கள். சீன விரிவாக்கம், அதற்கு எதிரான இந்தோ பசிபிக் வியூகம், குவாட் வியூகம் என்பதற்குள் இச்சிறிய நாடு சிக்கிவிட்டது. நாட்டின் துறைமுகங்களில் ஒன்றாகிய அம்பாங்கோட்டை துறைமுகத்தை சீனா 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எழுதி பெற்றுக் கொண்டு விட்டது. கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே சீனா ஒரு துறைமுகப் பட்டினத்தைக் கட்டியெழுப்பிவிட்டது. அத்துறைமுகப் பட்டினத்துக்கு நாட்டில் உள்ள மாகாண சபைகளை விடவும் சில அதிகாரங்கள் விசேஷமாக கொடுக்கப்பட்டிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. தன் சொந்த மக்களுக்கு கொடுக்கத் தயாரற்ற அதிகாரங்களை பிறத்தியாருக்கு கொடுக்கிறது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு. ஒரு காலம் தேரவாத சிங்கள பௌத்தத்தின் மரபுரிமை சின்னங்களே இந்த நாட்டின் அடையாளங்களாக இருந்தன. ஆனால் இப்பொழுது சீனா கட்டிக் கொடுத்த தாமரை கோபுரந்தான் நாட்டின் நவீன அடையாளமாக மாறியிருக்கிறது. சீன விரிவாக்கத்தின் பலனாக இலங்கை தீவின் வரைபடமே மாறிவிட்டது.



சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா தனது நிலைகளை இச்சிறிய தீவுக்குள் பலப்படுத்த முற்படுகின்றது. குறிப்பாக வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறிவிட்டது. அது மட்டுமல்ல போரை வென்ற ராஜபக்சக்களின் சுதந்திரம் பெருமளவுக்கு நாட்டுக்குள்ளேயே சுருங்கத் தொடங்கிவிட்டது. அமெரிக்க கண்டத்தின் இரு பெரிய நாடுகளில் அவர்கள் பயணம் செய்யவும் சொத்துக்களை முதலீடு செய்யவும் தடை உருவாகியிருக்கிறது. அதுபோன்ற தடைகள் ஐரோப்பாவுக்கும் பரவக்கூடும். ராஜபக்சங்களுக்கு அமெரிக்க கண்டத்தில் மட்டும் தடையில்லை, உள்நாட்டிலும் அவர்களுக்கு கடந்த ஆண்டு பாதுகாப்பு இருக்கவில்லை. அதனால்தான் மூத்த ராஜபக்சக்கள் நாட்டின் படைத்தளங்களில் ஒழிந்தார்கள். அல்லது நாடு விட்டு நாடு ஓடிக் கொண்டிருந்தார்கள். சொந்த நாட்டிலேயே அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அவர்கள் வென்று கொடுத்த நாட்டிலேயே அவர்களுக்கு நிம்மதியாக உறங்க முடியாமல் போய்விட்டது. ஏன் இந்த நிலை வந்தது? அப்படியென்றால் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன?

யுத்தந்தான் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியது என்றால், யுத்தம் முடிந்த பின்னரும் ஏன் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியவில்லை? நாடு ஏன் அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது?

ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை. அப்படி மாற்றவும் முடியாது. ஏனென்றால் நாட்டின் மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரை பூச்சி, புழுக்களைப் போல கொன்று குவித்துப் பெற்ற வெற்றியது. ஒரு இனப்படுகொலையை அரசியல் தீர்வாக மாற்ற முடியாது. மாறாக இனப்படுகொலைக்கு எதி ரான நீதிதான் அரசியல் தீர் வாக அமைய முடியும். அதைத்தான் தமிழர்கள் கேட் கிறார்கள். முழுமையான 13ஐ அல்ல.

ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடப் போவ தாக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தினார். ஆனால் சுதந்திரதின விழாவன்று அவரால் அப்படிப்பட்ட அறிவிப்பு எதனையும் வெளியிட முடியவில்லை. அவர் கொழும் பில் 200 மில்லியன் ரூபாய் செலவில் சுதந்திர தினத்தை கொண்டாடிய பொழுது, தமிழர் தாயகத்தில் சுதந்திர தினம் ஒரு கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி தமிழ் மாணவர்கள் ஊர்வலம் போனார்கள்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப்பது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த பல தசாப்தங்களாக அவர்கள் அவ்வாறுதான் அனுஷ்டித்து வருகிறார்கள். 1957 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு கேட்டது. அந்த அழைப்பை ஏற்று திருமலையில் நடராஜன் என்றழைக்கப்படும் இளைஞர் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்பு கொடியை கட்ட முற்பட்டார். அவரை திருக்கோணமலை சந்தையில் வியாபாரஞ் செய்த ஒரு சிங்களவர் வேட்டைத் துவக்கினால் சுட்டு வீழ்த்தினார். இன்றுவரையிலும் நடராசனுக்கு நீதி கிடைக்கவில்லை. தமிழ் மிதவாதிகளால் தூண்டிவிடப்பட்டு தமிழ் இளையோர் எத்துணை துணிகரமான செயல்களில் இறங்கமுடியும் என்பதற்கு நடராசன் முதலாவது முன்னுதாரணம். தமிழ் மக்களின் போராட்டத்தில் முதல்வித்து அவர். நடராசனுக்குப் பின் அவ்வாறு துணிச்சலாகத் தங்கள் உயிர்களை,உறுப்புகளை, சொத்துக்களை, கல்வியை, இழந்த தியாகிகளின் மிகநீண்ட பட்டியல் தமிழ்மக்களிடம் உண்டு. ஆனாலும் நடராசன் சுட்டு வீழ்த்தப்பட்டு 65ஆண்டுகளின் பின்னும், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. சுதந்திர தினம் கரிநாளாகவே காணப்படுகிறது.

ஆனால் நடராசனை கறுப்புக்கொடி ஏந்துமாறு தூண்டிய தமிழ் மிதவாதிகளின் வழிவந்தவர்கள் பின்னாளில் தாங்களே சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியை கைகளில் ஏந்தி அசைத்தார்கள். கொல்லப்பட்ட நடராசனை அதை விடக் கேவலமாக அவமதிக்கமுடியாது. அவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலகட்டத்தில், சுதந்திரதின விழாவில் பங்குபற்றிய தமிழ்த் தலைவர்கள், இப்பொழுது மட்டக்களப்பில் காந்தி பூங்காவில் காந்திக் குல்லாயும் கறுப்புக் கொடியுமாக நிற்கிறார்கள். அவர்கள் எதற்காக காந்திக் குல்லாய் அணிந்தார்கள் என்று தெரியவில்லை.



ஆனால் அவர்களுடைய நடப்பு அரசியலை வைத்து பார்க்கும்போது, அவர்களுடைய தோற்றம் வினோத உடைப் போட்டியில் வேசமிட்டு வந்தவர்களைப் போல காணப்பட்டது. அவர்கள் விதவிதமான வினோத உடைகளை அணிந்து தமிழ் மக்களைக் கவர முயற்சிக்கிறார்கள்.

ஒருபுறம் தமிழ் அரசியல்வாதிகள், அரசியலை வினோத உடைப் போட்டியாக மாற்றுகிறார்கள், இன்னொருபுறம் ஜனாதிபதி ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு தருவேன் என்கிறார். கடந்த வாரம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் போலீஸ் அதிகாரம் தொடர்பில் இப்போதுள்ள நிலைமைகளில் மாற்றம் இல்லை என்று கூறுகிறார். அதாவது 13 மைனஸ்? அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு போலீஸ் அதிகாரத்தைப் பெறும் சுதந்திரம் இல்லை. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வைப் பெறும் சுதந்திரந்தான் உண்டு. ஆனால் அதைக் கூறியது யாரென்றால் சுதந்திரமில்லாத ஒரு நாட்டின் தலைவர்?

புவிசார் அரசியல் விளக்கங்களின்படியும், பூகோள அரசியல் விளக்கங்களின்படியும் ஒரு பிராந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் ஒரு சிறியநாடு முழு அளவுக்கு சுதந்திரமானதாக இருக்க முடியாது. ஆனால் அச்சிறிய நாடு வெளிச்சக்திகள் தலையிட முடியாதபடி உருகிப்பிணைந்த ஒரு நாடாக இருந்தால், அது ஒப்பீட்டளவில் ஆகக்கூடிய பட்சம் சுதந்திரமாக இருக்கலாம். சிறிய நாடுகளைப் பொறுத்தவரை சுதந்திரத்தின் அளவு என்பது ஐக்கியத்தின் அளவுதான். நல்லிணக்கத்தின் அளவுதான். அந்தநாட்டில் வாழும் எல்லா மக்கள் கூட்டங்களையும் அந்த நாட்டின் சகநிர்மாணிகளாக ஏற்றுக்கொண்டு பல்லினத் தன்மைமிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பினால், அது ஆகக்கூடியபட்சம் சுதந்திரமாக இருக்கலாம். இல்லையென்றால் தனக்குள் மோதிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை வெளிச்சக்திகள் வேட்டையாடும். அதுவும் இலங்கை போன்று மூன்று பேரரசுகளின் இழுவிசைகளுக்குள்,கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு ஜல சந்தியில், காணப்படும் மிகச்சிறிய நாடானது, தனக்குள் அடிபடுமாக இருந்தால் அது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பமாக மாறிவிடும். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

இலங்கைத்தீவு இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடு அல்ல. இறமையுள்ள நாடும் அல்ல. தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லாதவரை சிங்கள மக்களும் சுதந்திரமாக இருக்கமுடியாது என்பதைத்தான் கடந்த 13ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன. போரில் வெற்றி பெற்ற பின்னரும் ஏன் இந்த நாடு சுதந்திரமாக இருக்க முடியவில்லை? ஏன் இந்த நாடு செழிப்பாக நிமிர முடியவில்லை? தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த பின்னரும் தமிழ் அரசியலை முன்வைத்து ஏன் ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் பதில் கூற வேண்டியிருக்கிறது? வடக்கில் கடலட்டை எப்படி ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறியது? ஆயுத மோதல்களில் வெற்றி பெற்ற பின்னரும் இந்த நாடு ஐ.எம்.எப் போன்ற அனைத்துலக நிறுவனங்களின் சொற்கேட்டு கீழ்ப்படியும் ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டது?

இலங்கை அதன் 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் ஒரு காலகட்டம் எனப்படுவது ஐ.எம்.எப். போன்ற வெளித்தரப்புகளிடம் கடன்கேட்டுக் கையேந்தும் ஒரு காலமாகவே காணப்படுகிறது. இவ்வாறு வெளிநாடுகளிடமும் உலகப்பொது நிறுவனங்களிடமும் கையேந்தும் ஒருநாடு தன்னை சுதந்திரமான நாடாக கூறிக்கொள்ள முடியுமா? கார்ல் மார்க்ஸின் வார்த்தைகளிற் சொன்னால் “ஒடுக்கும் இனம் என்றைக்குமே நிம்மதியாக இருக்கமுடியாது”. அது சுதந்திரமாகவும் இருக்கமுடியாது. ஒரே ஒரு விடயத்தில்தான் இப்போதைக்கு சுதந்திரமாக இருக்கலாம். பிச்சையெடுப்பதற்கான சுதந்திரம். ■

# மட்டக்களப்பு சிறைக்கு சொந்தமான பண்ணையில் நெல் அறுவடை விழா

மட்டக்களப்பு, பெப். 17

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு சொந்தமான திருப்பெருந்துறை திறந்தவெளி பண்ணையின் நெல் அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு சிறைச்சாலையின் சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் நெல் அறுவடை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மூன்று தசாப்த காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்த குறித்த 23 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பண்ணையில் கடந்த சில வருடங்களாக வேளாண்மையும் ஏனைய பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல்தெனியவின் ஆலோசனைக்கு அமைவாகவும், சிறைச்சாலைத் திணைக்களத்தின் வழங்கள் பிரிவின் ஆணையாளரின் வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் ந. பிரபாகரனின் தலைமையில் 10 ஏக்கரில் நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டு அறுவடை நிகழ்வு இடம்பெற்றது.

சம்பா வகை நெல்லினம் இம்முறை விதைக்கப்பட்டிருந்ததுடன், சிறந்த விளைச்சலும் கிடைத்துள்ளது.





நஞ்சற்ற வேளாண்மை ஊடாக உற்பத்தி செய்யப்படும் நெல்லையும் ஏனைய பயிர் வகை ஊடாக பெறப்படுகின்ற விளைச்சல்களும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருக்கும் சிறைக் கைதிகளின் உணவுத் தேவைக்கும், ஏனைய சிறைச்சாலைகளின் உணவுத் தேவைக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

அறுவடை நிகழ்வில் பதில் பிரதான ஜெயிலர், விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை காவலர்கள், ஊழியர்கள் மற்றும் புனர்வாழ்வு கைதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கல்

அம்பாறை, பெப்.

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு தெரிவான சம்மாந்துறை வலய ஆசிரிய ஆலோசகர்கள் எண்மருக்கு நியமன கடிதங்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை வழங்கப்பட்டது.

இவ்வைபவம் சம்மாந்துறை வலய கல்விப் பணிமனையில் கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரிச்சங்கத் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அங்கு சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் உமர் மௌலானா நியமனக் கடிதங்களை வழங்கினார்.

அச்சமயம் வலய பிரதிக் கல்வி பணிப்பாளர்களான அப்துல் மஜீத் ஹைதர் அலி, திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், உதவி கல்விப் பணிப்பாளர்களான றியால், பரமதயாளன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கல்வி அமைச்சின் நியமன கடிதங்களை ஆசிரிய ஆலோசகர்களான எஸ் எல் .மன்சூர், கே.எம்.நஜாஸ், எம்.ஜௌபர், கே.அக்பர், திருமதி ராஜேஸ்வரன், கே.அற்புதராஜா, கே.எம். றிஸ்வி ஆகிய ஏழு பேர் பெற்றுக் கொண்டனர்.

(அ)

# கலப்பின மிளகாய் செய்கை பெருவெற்றி அளித்துள்ளது!

கொழும்பு, பெப். 17

2025 ஆம் ஆண்டுக்குள் நாட்டு மக்களின் நுகர்வுக்கு தேவையான செத்தல் மிளகாயை உற்பத்தி செய்ய முடியுமெனவும் அதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

சமீபத்தில் அமுகப்படுத்தப்பட்ட இரண்டு கலப்பின மிளகாய் இனங்களின் வெற்றியின் காரணமாக இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது.

இரண்டு மிளகாய் இனங்களிலும் இலை சுருட்டு நோயின் எதிர்ப்பு சக்தி உள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலை சுருட்டு நோயின் தாக்கம் காரணமாக பச்சை மிளகாயின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வருடாந்த உலர் மிளகாய்த் தேவை 55,000 மெற்றிக் தொன்னாகும். நாட்டில் இதுவரை 5000 மெற்றிக் தொன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 50,000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எனவே, 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டுக்குத் தேவையான முழு அளவிலான மிளகாயை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கல்வி tv CHANNEL-1

**17.02.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**17.02.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இந்திய கூலிப்படைகளுக்கு ஆப்பு வைத்தார் ஜனாதிபதி

## மட்டக்களப்பில் கூறினார் கஜேந்திரகுமார்

மட்டக்களப்பு, பெப். 17

**“இலங்கையின் சுதந்திர தினத்தன்று குல்லா அணிந்து எதிர்ப்பு தெரிவித்துவிட்டு யாழில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் ஜனாதிபதி ரணிலுடன் சொந்தம் கொண்டாடி 13ஆவது திருத்தம் தருவார் என்ற இந்திய கூலிப்படைகள் எல்லோருக்கும் சேர்த்து மாவட்ட சபைகள் தான் தர முடியும் என்று ரணில் ஆப்பு வைத் தார்” என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு மட்டு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-8ஆம் திகதியன்று கொள்கை விளக்கம் செய்த ரணில் 13 ஆவது திருத்தம் பற்றியோ மாகாணசபை பற்றியே ஒரு வார்த்தைகூட இல்லை. மாறாக மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றி அறிவித்தார். எல்லாருக்கும் ரணில் ஆப்பு வைத்துள்ளார்.

இந்த ரணில் தான் தமிழீழ தேசத்துக்கு உரிமை கொடுக்க இருந்தவராம். இவரை பகிஷ்கரித்தது நாங்கள் செய்த அநியாயமாம்.

இந்தளவுக்கு ஒரு கேவலம் கெட்ட தலைமைத்துவத்தை வைத்துதான் நாங்கள் எப்போவே அழிந்திருக்கவேண்டியது. இந்த தலைவர்கள் எப்போதோ அழித்திருப்பர்.

ரணில் தன்னுடைய உண்மையான முகத்தை காட்டியுள்ளார். குல்லா போட்டு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு யாழில் ரணிலுடன் சொந்தம் கொண்டாடினர். சிறிலங்கா சுதந்திர தினத்துக்கு காலை சாப்பிட்டதை மத்தியானம் மறந்துவிடுகின்ற கும்பல் தான் இவர்கள்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து மக்களுக்கு தெளிவான செய்தியை சொல்லி வருகின்றோம். காலத்துக்கு காலம் மாற்றப்படுகின்ற செய்தி அல்ல.

தமிழ்த் தேசியத் தவைலரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து என்றைக்கு விலகவேண்டி வந்ததோ அதற்கான காரணங்கள் அன்று தொடக்கம் இற்றை வரைக்கும் மாறாமல் ஒரே ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது.-என்றார். (அ)

# கிழக்கு புதிய கடற்படைத் தளபதி ஆளுநர் அனுராதாவை சந்தித்தார்



திருமலை, பெப். 16

கிழக்கு மாகாணத்துக்கு கடற்படை தளபதியாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எச்.ஈ.யு.டி.குமார, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தை, திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சந்தித்தார்.

கிழக்கு மாகாணத்தின் கடல்சார் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அத்துடன், புதிய கடற்படைத் தளபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. (அ)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 ஆம் கட்ட உலர் உணவு!



அம்பாறை, பெப். 17

சமகால பொருளாதார நெருக்கடியினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆறு கிராமங்களில் வாழும் ஒரு தொகுதி மக்களுக்கு இரண்டாம் கட்ட உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை நடத்தப்பட்டது.

கண்ணகி கிராமம், சின்னபனங்காடு, கோளாவில், வாச்சிகுடா, அக்கறைப்பற்று 7ஃ4, 8ஃ2 ஆகிய கிராமப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கு ஒரு குடும்பத்துக்கு தலா 10450 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் திட்ட இணைப்பாளர் அனிதா செல்வகுமார், மீளாய்வு கண்காணிப்பு உத்தியோகத்தர் திருமதி கிரிஜா, ஆலையடிவேம்பு கள உத்தியோகத்தர் திருமதி நிஷாகரி பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு நிவாரணங்களை வழங்கினர். (அ)

# கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரியாக நஸ்மியா சனூஸ் நியமனம்

அம்பாறை, பெப். 17

கல்முனை கல்வி வலய, கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் இஸ்லாம் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி. திஸாநாயக்கவினால் கடந்த வாரம் நியமிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை கல்முனை முஸ்லிம் கோட்டக்கல்விப் பணிமனையில் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி வீ.எம். ஸம்ஸமிடமிருந்து தமது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹறுதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலகக் கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி எம்.என். எம். மலிக் ஆகியோர் முன்னிலையில்



ஏ.பி.நஸ்மியா சனூஸ் தனது கடமைகளை பெறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை கல்வி வலயத்தின் இஸ்லாம் பாட உதவிக்கல்வி பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான நஸ்மியா சனூஸ் அப்பதவிக்கு மேலதிகமாகவே கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வகிப்பார். (அ)

# கனடாவிலிருந்து விடுமுறையில் வந்த தமிழர் விபத்தில் மரணம்!

அம்பாறை, பெப். 17

கொழும்பு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி அம்பாறை-திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், பெண்ணொருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக குடும்பத்தினர் தெரிவிக்கையில், கொழும்பு-பம்பலப்பிட்டியில் உள்ள சகோதரி சுகவீனமடைந்த நிலையில், அவரை சுகநலம் விசாரிப்பதற்காக கடந்த செவ்வாய்க்கிமை மாலை 5 மணியளவில் திருக்கோவிலில் இருந்து அவர்களுடைய காரில் கொழும்பு நோக்கிப் பயணமாகியுள்ளனர்.

இந்நிலையிலேயே கொழும்பு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இரு சகோதரர்களும் உயிரிழந்துள்ளனர்.

கனடாவில் இருந்து வி முறையைக் கழிப்பதற்காக வந்திருந்த, திருக்கோவிலை பூர்வீகமாக கொண்ட தங்கராசா நாகசுந்தரம் (வயது-70) மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த அவரது சகோதரர் தங்கராசா கேதாரவரதசுந்தரம் (வயது-74) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆவர்.

உயிரிழந்த நாகசுந்தரத்தின் மனைவி சாருமதி மற்றும் உயிரிழந்த கேதாரவரதசுந்தரத்தின் மகன் ஜசிகாந் ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.(அ)

# சாரணிய மாணவர்கள் குழு மட்டு. கோட்டைக்கு விஜயம்



மட்டக்களப்பு, பெப். 17

ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு கோட்டைக்கு, மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பாடசாலையின் சாரணிய அணியினர் கள விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

பாடசாலையின் சாரணிய இயக்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியை ஜெயசக்தி புவீந்திரனின் வழிகாட்டலில் 5 சாரண அணியைக் கொண்ட 25 மாணவர்கள் இவ்விஜயத்தில் இணைந்துகொண்டனர். (அ)

# கடல் நீர்மட்டம் அதிகரிப்பால் பல கோடி மக்களுக்கு ஆபத்து

## ஐ.நா. எச்சரிக்கை



**நியூயோர்க், பெப். 17**

**1900 ஆம் ஆண்டு முதல் கடல் வேகமாக உயர்ந்து வரும் நிலையில் தாழ்வான கடலோரப் பகுதிகள் மற்றும் சிறிய தீவுகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்படவுள்ளனர்.**

இந்நிலையில் கடல் மட்டம் உயர்வதால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் எச்சரித்துள்ளார்.

கடல் மட்டம் உயர்வதால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற விவாதத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பாங்கொக், பியூனஸ் அயர்ஸ், ஜகார்த்தா, லாகோஸ், லண்டன், லொஸ் ஏஞ்சல்ஸ், மும்பை, நியூயோர்க் மற்றும் ஷாங்காய் போன்றவை கடுமையாக பாதிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த 11,000 ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு கடந்த நூற்றாண்டில் உலகப் பெருங்கடல் வேகமாக வெப்பமடைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

ஆகவே வளரும் நாடுகள், குறிப்பாக, வேகமாக மாறிவரும் உலகத்திற்கு ஏற்ப வளங்களைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் அன்ரனியோ குட்டரெஸ் கேட்டுக்கொண்டார்.

காலநிலை மாற்றம் உலகத்தை வெப்பமாக்குவதால் பனிப்பாறைகள் மற்றும் பனிக்கட்டிகளை உருகுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. (அ)

# உக்ரைன் போர் குறித்து பதிவிட்ட ரஷ்ய மாணவி உடனடியாக கைது

மொஸ்கோ, பெப். 17

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நடத்தி வரும் போரை, ரஷ்யர்களில் ஒரு தரப்பினரை ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வருகின்றனர்.

அப்படி எதிர்ப்பு தெரிவிப்பவர்களை ஜனாதிபதி புதின் தலைமையிலான அரசாங்கம் இரும்பு கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது.

இந்த சூழலில் ரஷ்யாவின் ஆர்க்காங்கெல்ஸ்க் நகரை சேர்ந்த 20 வயதான பல்கலைக்கழக மாணவி ஒலேஸ்யா, உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யாவுக்கு எதிராக சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் பதிவு ஒன்றை வெளியிட்டார்.

அத்தோடு போரில் ரஷ்யாவை விமர்சிக்கும் வகையில் தனது நண்பர்கள் பதிவிட்ட பதிவுகளையும் அவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்தார்.

இந்த விவகாரத்தில் ஒலேஸ்யாவை கைது செய்த பொலிஸார் அவரை வீட்டு சிறையில் வைத்தனர்.

மேலும், அவரது காலில் 'எலக்ட்ரானிக் ரக்' பொருத்தி அவரது ஒவ்வொரு அசைவுகளையும் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒலேஸ்யா செல்போனில் பேசவும், இணையத்தைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை நியாயப்படுத்தியதாகவும், ரஷ்ய ஆயுதப்படைகளை இழிவுபடுத்தியதாகவும் ஒலேஸ்யா மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# கடந்த 24 மணித்தியாலங்களில் 32 இடங்களில் நிலநடுக்கங்கள்!

நியூயோர்க், பெப். 17

நேற்று காலை முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் உலகம் முழுவதும் 32 இடங்களில் நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

இந்த நிலநடுக்கங்களில், அதிகபட்சமாக 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பிலிப்பைன்ஸில் பதிவாகியுள்ளது.

அத்துடன், நியூசிலாந்து, அலாஸ்கா, கொலம்பியா, டோங்கா, பொலிவியா உள்ளிட்ட பல நாடுகளில் 5 ரிக்டருக்கு மேல் வலிமை கொண்ட நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பயங்கர சோகத்தை எதிர்கொண்ட துருக்கியில் கடந்த 24 மணி நேரத்தில் 4.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கமும் பதிவாகியுள்ளது. (அ)

# ருமேனியா வானில் பறந்த மர்ம பலூன்!

நியூயோர்க், பெப். 17

ஐரோப்பிய நாடான ருமேனியாவின் வான்பரப்பில் மர்ம பலூன் பறந்து சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் இந்த மாத தொடக்கத்தில் சீனாவின் உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு பிறகு அந்த நாட்டின் வான் பரப்பில் அடுத்தடுத்து 2 மர்ம பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, சுட்டு வீழ்த்தப்பட்டன.

அதேபோல் அமெரிக்காவின் அண்டை நாடான கனடாவிலும் வானில் பறந்த மர்ம பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த நிலையில் ஐரோப்பிய நாடான ருமேனியாவின் வான் பரப்பில் மர்ம பலூன் பறந்து சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் இராணுவ அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், 'நாட்டின் தென்கிழக்கு பகுதியில் சுமார் 36 ஆயிரம் அடி உயரத்தில் வான்வெளியில் மர்ம பலூன் ஒன்று பறப்பதை ரேடார் அமைப்பு கண்டறிந்தது.

அதனை தொடர்ந்து உடனடியாக 2 போர் விமானங்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் விமானங்கள் சென்றபோது அந்த இடத்தில் மர்ம பலூன் எதுவும் இல்லை.

ராடரில் இருந்தும் அது மறைந்துவிட்டது. எனவே ருமேனிய வான்வெளிக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை' என கூறப்பட்டது.

அதேபோல் ருமேனியாவின் அண்டை நாடான மோல்டோவாவும் தங்கள் வான்பரப்பில் மர்ம பலூன் தென்பட்டதாக தெரிவித்தது.

அதுமட்டும் இன்றி வானில் மர்ம பலூன் கண்டறியப்பட்டதை தொடர்ந்து,



முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மோல்டோவா தனது வான் வெளி முழுவதையும் தற்காலிகமாக மூடியது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன அல்லது தாமதமாக இயக்கப்பட்டன. பல விமானங்கள் ருமேனியாவுக்கு மாற்றிவிடப்பட்டன.

இரண்டு சம்பவங்களும் தொடர்புடையதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இந்த மர்ம பலூன்கள் எங்கிருந்து வந்தன என்று இரு நாடுகளும் தெரிவிக்கவில்லை. (அ)

## கப்ரியல் புயல்:

# சர்வதேச உதவிகளை ஏற்கும் நியூஸிலாந்து

வெலிங்டன், பெப். 17

நாட்டின் வடக்கில் பரவலான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்திய மற்றும் சில நகரங்களை துண்டித்த கேப்ரியல் சூறாவளிக்குப் பின்னர் போராடி வரும் நியூஸிலாந்து, சர்வதேச உதவிகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

ஆரம்பத்தில் அமெரிக்கா மற்றும் பிற நாடுகள் உதவிகளை அறிவித்த பிறகு, பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸ் சர்வதேச உதவிகளை ஏற்பதாக கூறியுள்ளார்.

மேலும், மீட்புப் பணிகள் தாமதம் ஆகலாம் எனவும் சில பகுதிகளுக்கு பல வாரங்களுக்கு மின்சாரம் மீட்டமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தங்களால் முடிந்தவரை விரைவாக உள்கட்டமைப்பை மீட்டெடுக்க முயற்சி செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குடும்பம் மற்றும் நண்பர்களுடன் மக்கள் தொடர்பு கொள்ள இயலாமை ஒரு உண்மையான பிரச்னை என்றும், உடனடியாக இணைப்பை அதிகரிக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் ஹிப்கின்ஸ் கூறினார்.

நான்கு நாட்களாக பலத்த காற்று மற்றும் கனமழைக்கு 5 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. 100 பேர் காணாமல் போயுள்ளதாகவும் மேலும் 10,500 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நியூஸிலாந்து தற்காப்புப் படை, இரண்டு பெரிய கப்பல்கள் மற்றும் சி-130 ஹெர்குலிஸ் போக்குவரத்து விமானம் மூலம் ஆயிரக்கணக்கான லீற்றர் தண்ணீரை பணியாளர்கள் மற்றும் பல நடமாடும் நீர் சுத்திகரிப்பு ஆலைகளுடன் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்க உள்ளது.

மேலும், ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி பொருட்களை வழங்கவும், அவர்களின் கூரைகளில் சிக்கித் தவிக்கும் நூற்றுக்கணக்கான மக்களை மீட்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் 5 மில்லியன் குடியிருப்பாளர்களில் சுமார் 75 சதவீதம் பேர் வசிக்கும் நியூஸிலாந்தின் வடக்குத் தீவின் பகுதிகள், பல வாரங்களில் இரண்டாவது பெரிய புயலைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

கடந்த மாதம் பெய்த வரலாறு காணாத மழையால் ஒக்லாந்தில் திடீர் வெள்ளம் ஏற்பட்டு நான்கு பேர் உயிரிழந்தனர். (அ)

# 2018இல் தாய்லாந்து குகையிலிருந்து மீட்கப்பட்ட சிறுவன் உயிரிழப்பு!

பாங்கொக், பெப். 17

2018 இல் தாய்லாந்து குகையில் சிக்கி 18 நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்ட சிறுவன், 4 வருடங்களுக்குப் பின்னர் உடல்நலக் குறைவால் உயிரிழந்துள்ளார்.

சியாங்ராய் மாகாணத்தில் தாம் லுவாங் என்ற குகை உள்ளது. சுமார் 10 கி.மீ. நீளமுடைய இந்த குகை ஆசியாவிலேயே மிகப் பெரிய குகையாகும்.

தாய்லாந்து-மியான்மர் எல்லையில் இந்தக் குகை அமைந்துள்ளது. சியாங்ராய் மாகாணத்தைச் சேர்ந்த வைல்ட் போர் எனும் 11 வயது முதல் 16 வயது கொண்ட கால்பந்து அணியைச் சார்ந்த சிறுவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி இந்தக் குகைக்குச் சென்றனர்.

இந்தச் சிறுவர்களுக்கு உதவியாக துணைப் பயிற்சியாளர் எக்காபோல் சந்தாவாங் உடன் சென்றிருந்தார். அப்போது,



அங்கு பெய்த கடுமையான மழை காரணமாக குகையில் மாணவர்களும், பயிற்சியாளரும் சிக்கிக் கொண்டனர். கடும் மழைக்கு இடையே குகையில் சிக்கிய கால்பந்து அணியை சேர்ந்த சிறுவர்கள் 18 நாட்கள் போராட்டத்திற்கு பிறகு பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்த கால்பந்து குழுவின் தலைவராக இருந்த டங் பஜ் தனது கால்பந்தாட்டத்தை கடந்த சில ஆண்டுகளாக மெருகேற்றிக் கொண்டு இருந்தார். அதன் பலனாய் பிரிட்டனில் உள்ள லீசெஸ்டர்ஷையரில் உள்ள புரூக் ஹவுஸ் கல்லூரி கால்பந்து அக்கடமியில் டங் பஜ்க்கு கடந்த ஆண்டு இடம் கிடைத்தது. இதனை தாய்லாந்து கால்பந்து அணியினர் மகிழ்ச்சியாக கொண்டாடினர்.

இது குறித்து டங் பஜ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "எனது கனவு நனவாகியது" என பகிர்ந்திருந்தார்.

இந்த நிலையில், டங் பஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது ஒய்வறையில் மயக்கம் அடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு டங் பஜ் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

பெரும் போராட்டத்திலிருந்து உயிருடன் மீண்டு, தனது கனவை நோக்கி பயணித்த டங் பஜ்ஜின் மரணம் தாய்லாந்து மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

(அ)

# நியூசிலாந்துடனான டெஸ்ட் இங்கிலாந்து ஓட்டம் குவிப்பு!

வெலிங்டன், பெப். 17

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்களை குவித்துள்ளது.

இங்கிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக நியூசிலாந்து சென்றுள்ளது. அங்கு மௌண்ட் மௌங்கனியில் நேற்று ஆரம்பமான பகலிரவு டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

ஸ்டோக்ஸ் - மெக்கலம் கூட்டணியில் டெஸ்டிலும் விரைவாக ஓட்டங்களை குவித்து புரட்சி செய்து வரும் இங்கிலாந்து அணி நியூசிலாந்திலும் அதே பாணியைப் பின்பற்றியுள்ளது.




நியூசிலாந்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களை எடுப்பதே சிரமம் என்கிற நிலையில் வழக்கம் போல வேகமாக ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்கள் இங்கி லாந்து துடுப்பாட்ட வீரர்கள். பென் டக்கட் 68 பந்துகளில் 84 ஓட்டங் களும் ஹாரி புரூக் 81 பந்துகளில் 89 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

இங்கிலாந்து அணி, 58.2 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்கள் (ஓட்ட சராசரி - 5.57) எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

நியூசிலாந்தின் சார்பில் பந்துவீசிய நீல் வாக்னர் 4 விக்கெட்களை வீழ்த்தினார். எல்லா நியூசிலாந்து பந்துவீச்சாளர்களும் ஓர் ஓவருக்குக் குறைந்தது 4 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்திருந்தார்கள்.

நியூசிலாந்து அணி முதல் நாள் முடிவில் 18 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 37 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ரொம் லதாம் 1, வில்லியம்சன் 6, ஹென்றி நிகோல்ஸ் ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். கொன்வே 17, நீல் வாக்னர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அண்டர்சன் 2 விக்கெட்களும் ஒல்லி ரொபின்சன் ஒரு விக்கெட்டையும் எடுத்துள்ளார்கள். (ஐ)



# டெஸ்ட் தரவரிசை அஸ்வின் உயர்வு!

டுபாய், பெப். 17

டெஸ்ட் கிரிக்கெட்டில் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய சுழல் பந்து வீச்சாளர் ஆர். அஸ்வின் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இந்திய அணி. 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்களை வீழ்த்தினார் அஸ்வின். டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவில் 25 முறை 5 விக்கெட் டுகளை வீழ்த்தியுள்ளார் அஸ்வின்.

இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார் அஸ்வின். இதேபோல ஜடேஜா 16ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். முதலிடத்தில் உள்ள கம்மின்ஸை விடவும் 21 புள்ளிகள் பின்தங்கியுள்ளார் அஸ்வின்.

# சம்பியன்ஸ் லீக் உதைபந்து போராடி தோற்றது பி. எஸ். ஜி!

பாரிஸ், பெப். 17

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் 16 அணிகளின் சுற்றில் பாரிஸ் செ‌ன். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) 0 - 1 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் அணியிடம் தோல்வியை தழுவியது.

ஐரோப்பிய கண்டத்தில் நடைபெறும் உதைபந்தாட்ட லீக் போட்டிகளில் பிரதானமானதாக இருக்கும் சம்பியன்ஸ் லீக்கின் 16 அணிகள் சுற்று புதன்கிழமை தொடங்கியது.

இதில் களம் காணும் அணிகள் பரஸ்பரம் ஒன்றோடொன்று இருமுறை மோதிக் கொள்ளும். அந்த வகையில் முதல் நாள் ஆட்டங்களில் ஒன்றில் பி. எஸ். ஜி. - பேயர்ன் முனீச் அணிகள் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பேயர்ன் முனிச் அணிக்காக கிங்ஸ்லி கோமன் 53-ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். பி. எஸ். ஜி. அணிக்காக எம்பாப்வே அடித்த 2 கோல்களும் ஓவ் சைட் கோல்கள் ஆகின.

எம்பாப்வேயுடன் நெய்மர், மெஸ்ஸி என நட்சத்திர வீரர்கள் களத்தில் இருந்தும் அந்த அணியால் இறுதி வரை கோல் அடிக்க முடியவில்லை. பி. எஸ். ஜி. அணி தனது இரண்டாவது பாதி ஆட்டத்தில் பேயர்ன் முனீச் அணியை மார்ச் 8ஆம் திகதி சந்திக்கிறது. கடந்த தொடரில், இதே 16 அணிகள் சுற்றுடன் பி. எஸ். ஜி. வெளியேறிய நிலையில், தற்போது அதிலிருந்து முன்னேறும் முனைப்பில் இருக்கிறது அந்த அணி.

இதேசமயம், மற்றொரு போட்டியில் ஏசி மிலன் அணி டாட்டன்ஹோம் அணியை 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கடந்த 10 ஆண்டுகளில் சம்பியன்ஸ் லீக் தொடரில் ஏ. சி. மிலன் நொக் அவுட் சுற்றில் வெற்றிபெறுவது இதுவே முதல்தடவையாகும்.






# மேற்கிந்திய தீவு அணிக்கு இரு தலைவர்கள் நியமனம்!

ஜமைக்கா, பெப். 17

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெள்ளைப் பந்து தலைவர்களாக ஷாய் ஹோப்பும் ரோவ்மன் பவலும் தெரிவாகியுள்ளார்கள்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபது -20 உலகக் கிண்ணப் போட்டியில் முதல் சுற்றில் மோசமாக விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, சுப்பர் - 12 தகுதி பெறாமல் வெளியேறியது.

இதையடுத்து தலைமைப் பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ் தனது பதவியை இராஜிநாமா செய்தார். பிறகு, அணித்தலைவர் பதவியை இராஜிநாமா செய்வதாக நிகோல்ஸ் பூரண் அறிவித்தார். பூரண் தலைமை தாங்கிய 15 ஒருநாள் போட்டிகளில் 4 வெற்றிகளையும் 15 இருபது -20 போட்டிகளில் 4 வெற்றிகளையும் அடைந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து அணிகளிடம் மேற்கிந்தியத் தீவுகள் அணி தோற்றது. ஒரு துடுப்பாட்ட வீரராகவும் பூரணின் பங்களிப்பு மோசமாகவே இருந்தது. இதன்பிறகு, அடுத்த மார்ச்சில்தான் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 ஒருநாள், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெள்ளைப் பந்து அணிகளின் தலைவராக ஷாய் ஹோப்பும் ரோவ்மன் பவலும் தெரிவாகியுள்ளனர். ஒரு நாள் அணிக்கு ஷாய் ஹோப்பும் இருபது -20க்கு ரோவ்மன் பவலும் அணிகளின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ஐ)

# தொழில்நுட்ப தவறால் முதலிடம் பிடித்த இந்தியா!

டுபாய், பெப். 17

ஐ. சி. சியின் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்துக்கு இந்திய அணி முன்னேறியமை தொழில்நுட்பத்தின் தவறால் என்று சர்வதேச கிரிக்கெட் சபை விளக்கமளித்துள்ளது.

சமீபத்தில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றது இந்திய அணி. தற்போது, 4 டெஸ்ட்கள் கொண்ட அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என இந்திய அணி வென்றாலே உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடும். இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் டில்லியில் இன்று தொடங்குகின்றது.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறியது. இதையடுத்து டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 என மூன்றிலும் முதலிட அணியாக இந்திய அணி இருந்தது. இதனை இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் அந்தத் தகவலை மிகவும் கொண்டாடினார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோசம் சில மணி நேரம் கூட நீடிக்கவில்லை. தொழில்நுட்பத்தின் தவறால் இந்திய அணி முதலிடம் வகித்ததாக ஐ. சி. சி. விளக்கம் அளித்தது.

பெப்ரவரி 15 அன்று குறுகிய நேரம் ஐ. சி. சி. தரவரிசையில் தொழில்நுட்பத் தவறு ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறோம். அதனால் இந்திய அணி தவறுதலாக முதலிட டெஸ்ட் அணியாக இருந்தது. இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம் என்று ஐ. சி. சி. கூறியுள்ளது.

தவறு சரி செய்யப்பட்டதையடுத்து அவுஸ்திரேலிய அணி முதலிடத்துக்கு மீண்டும் வந்தது. இந்திய அணி 2ஆம் இடத்துக்குத் திரும்பியது. தரவரிசையில் அவுஸ்திரேலியா 126 புள்ளிகளையும் இந்தியா 115 புள்ளிகளையும் கொண்டுள்ளன.

# தேர்தலை எதிர்கொள்வதற்கு பெரமுன ஒருபோதும் அஞ்சாது

## கோகிலா ஹர்சனி எம்.பி. கூறுகிறார்




கொழும்பு, பெப். 17

**பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றை எதிர்கொள்வதற்கும் தாங்கள் தயாராகவே இருப்பதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்சனி குணவர்தன தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைத்த வாக்குகளை வைத்துக்கொண்டு வெற்றி பெற்ற தரப்பினர் இன்று எதிர்க்கட்சிகளில் இருந்துகொண்டு செயற்படுவதால் அது பொதுஜன பெரமுனவை எந்தவிதத்திலும் பாதிக்காது.

பொதுஜன பெண்கள் முன்னணி என்ற முறையில் எதிர்வரும் வாரங்களில் நாடளாவிய ரீதியில் சம்மேளனத்தை நடத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

கட்சி என்ற முறையில் எமது அரசியல் நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துக்கொண்டு செல்கின்றோம்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எந்தத் தேர்தலையும் வெற்றிகொள்வதற்கு பொதுஜன பெரமுன எப்போதும் தயாராகவே இருக்கின்றது.

யார் எதனைக் கூறினாலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன ஒருபோதும் அஞ்சாது. கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நாம் பாரிய தோல்வியைச் சந்திப்போம் என்று அனைவரும் கூறினர்.

எனினும், அந்தத் தேர்தலிலும் நாம் பாரிய வெற்றியைப் பெற்றோம். அதேபோன்று இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பாரிய வெற்றியைப் பெறுவோம்.

இந்த நாட்டுக்குச் சேவையாற்றியவர்கள் யார், சேவையாற்றாதவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

ஹெலிஹொப்டர் சின்னத்தில் இருப்பவர்களும் ஏனைய எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் எமது கட்சியிலேயே கடந்த முறை போட்டியிட்டார்கள்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு நன்கு பாடம் புகட்டுவார்கள்-என்றார். (அ)

# ஆர்ப்பாட்டம் செய்வதற்காக நாம் யாரையும் பதவி நீக்கமாட்டோம்!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, பெப். 17

ஆர்ப்பாட்டம் செய்வதற் காக நாம் யாரையும் பதவியிலி ருந்து நீக்கமாட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ட்ரேஸ் சிட்டியி லுள்ள இலங்கை தொழில்நுட் பக் கல்லூரியின் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை, நிர் வாகம் மற்றும் பொதுக் கொள்கைக்கான மையத்தை உத்தியோ கபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ் வாறு கூறினார்.

ருஹுணு பல்கலைக்கழகத் தில் உப வேந்தரை நீக்கக் கோரி யும் கூட்டுத்தாபனம் ஒன்றின் பொது முகாமையாளரை நீக்கக் கோரியும் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் இந்த கருத்து வந்துள்ளது.

அவர்களுக்கு எதிராக ஏதே னும் தீவிரமான குறைபாடுகள் இருப்பதாக ஆர்ப்பாட்டக்கா ரர்கள் நினைத்தால் அதற்காக பின்பற்றவேண்டிய



நடைமுறை உள்ளது எனவும் உப வேந்தர்கள் தொடர்பிலும் பின்பற்றவேண் டிய நடைமுறை உள்ளது என வும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி னார்.

மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக வும் அது கூட்டுத்தாபனம் அல் லது பல்கலைக்கழகத்தில் முன் னெடுக்கப்பட்டது என்பதற்கா கவும் இந்த அரசாங்கம் மாறாது என அவர் மேலும் கூறினார்.(அ)

# நாடு அராஜக பாதையில் செல்வதை தடுப்பது எதிர்க்கட்சி உள்ளிட்ட சகலரின் பொறுப்பாகும்

## வலியுறுத்துகின்றார் கரு ஜயசூரிய

கொழும்பு, பெப். 17

நெருக்கடிகள் மத்தியில் நாடு அராஜக பாதையில் செல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப் பது எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல் சக்திகளின் பொறுப்பாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.



தற்போது உருவாகியிருக்கும் சிக்கல்களை சரியாக மதிப்பிட்டு, உருவாகிக்கொண்டிருக்கும் எதிர்மறை சூழ்நிலைகளை மேலும் வளரவிடாமல் இருப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என அவர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் உருவாகிக்கொண்டிருக்கும் பாரதூரமான நெருக்கடிகளைச் சரியாக மதிப்பீடு செய்து, பொது இணைக்கப்பாட்டின் ஊடாக, மக்களின் இறையாண்மை அதிகாரத்தை சரியாக பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்கள் ஆணை யின் ஊடாக சிறந்த ஆட்சிக்கு வழிவகுக்கும் தேர்தலுக்கு தாமதமின்றி பிரவேசிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ)

# தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சி மக்கள் போராட்டத்துக்கு வழிவகுக்கும்!

## எச்சரிக்கிறார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, பெப். 17

தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் மீண்டும் மக்கள் போராட்டத்துக்கு வழிவகுக்கும் என 43ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள 43ஆவது படையணி அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேர்தலை பிற்போவதற்கு 21 தடவைகள் முயற்சித்த அரசாங்கம், 22ஆவது தடவையில் நிதி அமைச்சின் செயலாளரையும் அச்சகப் பிரதானியையும் பயன்படுத்திக்கொண்டு பணம் வழங்காமல் தேர்தலை பிற்போவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், தேர்தலை பிற்போடுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் மக்களின் இறையாண்மைக்கு விடுக்கப்படும் மரண அடியாகும்.

பயங்கரவாத அச்சுறுத்தல், சுனாமி மற்றும் கொரோனா போன்ற இக்கட்டான நிலையில் இந்த நாட்டில் தேர்தல் இடம்பெற்றது. நாட்டின் தற்போதைய நிலைமையிலும் பணம் இல்லையென்றோ அல்லது வேறு காரணங்களை காட்டி தேர்தலை பிற்போட்டால் நிச்சயமாக மக்கள் போராட்டம் ஏற்பட்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை விரட்டியடித்ததைப் போன்ற செயற்பாடுக்கு வழிவகுக்கும்-என்றார். (அ)

# சப்ரகமுவ பல்கலைக்குள் மாணவர் குழுக்கள் மோதல்

## 9 மாணவர்களுக்கு காயம்

கொழும்பு, பெப். 17

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் குழுவுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கும் விடுதியிலுள்ள மாணவர்கள் குழுவுக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது காயமடைந்த 09 மாணவர்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# தடையற்ற மின்சாரத்தை உறுதி செய்யவேண்டும்!

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, பெப். 17

மின் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும், மத ஸ்தலங்கள், அரச மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு சூரிய ஒளி கூரை அமைப்புகளை வழங்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை மின்சார சபை முன்வைத்த புதிய மின் கட்டண அதிகரிப்பு குறித்த யோசனைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் எதிர்த்தாலும், ஏனையோர் அனுமதி வழங்கியுள்ள நிலையில் இது நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் மின்சார கட்டணம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் 66 வீதம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க இடமளியோம்

## அநுரகுமார திட்டவட்டம்

கொழும்பு, பெப். 17

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்தலை எப்படியாவது பிற்போடுவதே ஜனாதிபதியின் திட்டம் எனவும், அவர் அந்த வழியிலேயே பயணிப்பாரானால் அதற்கு பதிலடி கொடுப்பதற்கு தாங்கள் தயார் எனவும் அவர் கூறினார்.

இலட்சக்கணக்கான மக்களுடன் வீதிக்கு இறங்குவோம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (அ)

## மின்சார...

நேற்று மின்சக்தி அமைச்சர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

தேவைகளின் அடிப்படையில் மின் கட்டணத்தில் திருத்தம் ஏற்படுத்த வேண்டும் என்று நாம் முன்மொழிந்துள்ளோம். ஜனவரியில் முன்மொழியப்பட்டபடி கட்டணம் திருத்தப்பட்டால், மீண்டும் ஜூலையில் மறுபரிசீலனை செய்து கட்டணத்தை திருத்துவோம்.

எரிசக்தி துறையில் புதிய முதலீட்டாளர்கள் பிரவேசிப்பதற்கான சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எது எப்படி இருப்பினும் வரும் ஜூலை மாதத்துக்குள் நாம் உண்மையான நிலைமையை தீர்மானிக்க முடியும். எனினும், அக்காலப் பகுதியில் மின்சார கட்டணம் அதிகரிக்காது என்று நம்புகிறேன். அப்போது, அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்கும்.

போராட்டங்களுக்கு அடிபணிந்து மின்கட்டண திருத்தத்தை மீள்பரிசீலிக்க போவதில்லை. மின் கட்டண அதிகரிப்பை தொடர்ந்து பொருள் மற்றும் சேவை கட்டமைப்பின் கட்டண அதிகரிப்பை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே அரச சேவைத்துறை ஊடாக நிவாரணம் வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## 250சிறார்கள்...

தெரிவித்துள்ளது.

இதேவேளை, வருடாந்தம் நாட்டில் 900 சிறார்கள் புற்றுநோய்க்கு உள்ளாகின்றனர் என்று தேசிய புற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார். (ஐ)

## ரூ.300 கோடி...

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய தேசிய குழுவின் தலைவராக தற்போது செயல்படும் மகிந்த தேசப்பிரிய நேற்று யாழ்ப்பாணம் வந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

“தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தவறானவை என்று எவரேனும் குறிப்பிடும்பட்சத்தில் அதனுடன் ஒருபோதும் என்னால் இணங்க முடியாது. தற்போதைய தேர்தல் ஆணைக்குழு தனது வரையறைக்குள் சரியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே எனது நிலைப்பாடாகும். ஏதேனுமொரு தேர்தல் நிதி நெருக்கடியால் காலம் தாழ்த்தப்படுமாயின் இனிவரும் காலங்களில் எந்தவொரு தேர்தலும் காலம் தாழ்த்தப்படக்கூடும்.

எனவே, நிதி இல்லை எனக் கூறி தேர்தலைக் காலம் தாழ்த்த அனுமதிக்கக் கூடாது. செலவுகளைக் கட்டுப்படுத்தி தேர்தலை நடத்த முடியும். தற்போது தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், செலவுகளைக் கட்டுப்படுத்தினால் 800 கோடி ரூபாயில் தேர்தலை நடத்தலாம். அதனை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது. தேர்தலுக்கு முன்னர் 250 அல்லது 300 கோடி ரூபாயே போதுமானது. அதனையும் கட்டம் கட்டமாக வழங்க முடியும்.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்கு சீட்டுக்கள் 19ஆம் திகதியாவது விநியோகிக்கப்பட்டால் 28ஆம் திகதியளவில் தபால் மூல வாக்கெடுப்பு நடத்த முடியும். எனவே, மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதிலும் சிக்கல் ஏற்படாது. இதனை மீறி இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவால் குறுகிய காலத்துக்கு தேர்தலை ஒத்தி வைக்க முடியும். எனினும், அது அரசமைப்பின் பிரகாரம் குற்றம் என்பதால் தேர்தல் காலம் தாழ்த்தப்பட மாட்டாது என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும் - என்றார். (ஐ)

## ஏனைய...

ரைஸ் மற்றும் உணவு பார்சலின் விலை 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று உணவக உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது. இதேபோன்று, வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், ஒரு தேசிய அடையாள அட்டையின் ஒரு பிரதியை நகல் எடுப்பதற்கு 15 ரூபாயாகவும் ஒரு ஏ4 கடதாசி நகல் பிரதி 10 ரூபாயாகவும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் விலைகளை 20 வீதத்தால் அதிகரிக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 13ஆம்...

பிரச்னைகளுக்கான தீர்வையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேபோன்று அவர்கள் அரசாங்கத்தையும் குறைகூறவில்லை.

தென்னிலங்கையில் பேசப்படும் விடயங்கள் எம்முடைய யதார்த்தமான பிரச்னைகள் அல்ல. இவை தவிர, தீர்க்கப்படவேண்டிய பல பிரச்னைகள் உள்ளன. வடக்கு - கிழக்கில் வாழும் சாதாரண மக்களுக்கு இன, மதவாத பிரச்னைகள் ஒன்றும் இல்லை. மாறாக, அவர்களுடைய பிரச்னை எம் அனை வரை போன்றும் அன்றாட வாழ்க்கை குறித்த பிரச்னையையே அவர்கள் எதிர் கொள்கின்றனர் என்றும் கூறியிருக்கிறார். (ஐ)

## மின்கட்டண...

வழங்கவில்லை. மின் கட்டண உயர்வுக்கு ஒப்புதல் அளித்த கூட்டம் குறிப்பிட்ட கோரம் இன்றி நடைபெற்றது.

மின்கட்டணத்தில் திருத்தம் செய்வதற்கான வழி சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு, மின்சார சபை தவறான வழியில் செய்த மின்கட்டணத் திருத்தத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. குறைந்த வருமானம் பெறும் நுகர்வோருக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இதற்கான முடிவை மின்சார சபையால் எடுக்க முடியாது. அது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் வேலை.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கூட்டு முடிவாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரம் இல்லாமல் கூட்டப்பட்டது. ஆணைக்குழுவின் தலைவர் என்ற முறையில் அதற்கு எதிராக அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்பேன் - என்றும் கூறினார். (ஐ)

## மின்கட்டணம்...

மரண தாக்குதலாக அமையும். மின்சார சபை தனது பல வருட நட்டத்தை ஈடு செய்வதற்காக இவ்வருடத்தில் மேலதிகமாக 28 ஆயிரத்து 800 கோடி ரூபாயை திரட்ட இலங்கை மின்சார சபை உத்தேசித்துள்ளது. கடந்த ஐந்து மாத காலத்துக்குள் இரு முறை மின் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 66 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் உணர்வுபூர்வமாக செயல்படுவதில்லை. தன்னிச்சையாக செயல்படும் அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத் தில் ஈடுபட வேண்டும். தொழிற்சங்கங்களால் மாத்திரம் தனித்து செயல்பட முடியாது.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுகம்,பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளை ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம். தொழிற்சங்க போராட்டத்துக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

# அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு தரப்பு சந்திப்பு



கொழும்பு, பெப். 17

அமெரிக்க உதவிப் பாதுகாப்புச் செயலாளர் இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை சந்தித்ததாக அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இந்து - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முதன்மை பிரதி உதவிப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா பி றொயல் தலைமையிலான தூதுக்குழுவினர், இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரை நேற்று வியாழக்கிழமை இரு வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்தனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் அந்தோனி நெல்சனும் இந்த சந்திப்பில் பங்கேற்றார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இருவருக்கும் இடையே சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதேவேளை, அமெரிக்க தூதுக்குழுவினர் நேற்று கோட்டை, ஜெயவர்த்தனபுரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்ததுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவையும் சந்தித்தனர்.

இதன்போது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஸ்திரத்தன்மை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# யானைகள் இடமாற்றம் மைத்திரிக்கு புதிய சிக்கல்!

கொழும்பு, பெப். 17

மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் சட்டவிரோதமான முறையில் மூன்று யானைகளை இடமாற்றம் செய்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கந்துல, மஞ்சுளா மற்றும் காஞ்சனா ஆகிய மூன்று யானைகளும் சட்டவிரோதமான முறையில் ஒப்படைக்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் யானைகளை தனது காவலில் வைத்திருந்த சம்பவத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனை பெற்ற நபரிடம் விலங்குகளை ஒப்படைத்தமை தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

அதன்படி உரிய விசாரணைகள் நடத்தப்படும் என பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் இருந்து 33 இலட்சம் ரூபாய்க்கு யானைக்குட்டியை இறக்குமதி செய்ததில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்தச் சம்பவம் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த மூன்று யானைகளும் வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பெண் கொலை...

அடித்துக் கொல்லப்பட்டார்.

இவரின் மரணம் தொடர்பில் விசாரித்த யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில்,

“அவர் அந்த வீட்டுக்கு தினமும் வருபவர். அன்றைய தினம் காலை முதல் இரவு வரை வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தார். இதன் போது கொலையான குடும்பப் பெண் ணுடன் அவருக்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் போது அவர் சாதியை குறிப்பிட்டு ஏசியமையால் ஆத்திரத்தில் அவரை கட்டையால் தாக்கி விட்டேன். அவர் உயிரிழந்து விட்டார்”, என்று கூறியுள்ளார். (ஐ)

## இறந்த நிலையில் யானை மாங்குளத்தில் மீட்பு!

முல்லைத்தீவு, பெப். 17

மாங்குளத்துக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடைப்பட்ட மேளீவனம் பகுதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற மீனவர்கள் இறந்த யானையை கண்டு நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது

இதேவேளை யானையின் ஒரு கால் காயமடைந்த நிலையில் காணப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்

இறந்த யானையின் உடற்கூற்று பரிசோதனைகள் இன்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படும் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

## தேர்தல்...

நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இதற் கான, தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவிருக்கும் நிலையில் நிதி நெருக்கடியால் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட வில்லை. இதைத் தொடர்ந்து எழுந்துள்ள நிதி நெருக்கடி களுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே திறைசேரியுடன் பேச்சு நடத்த தேர்தல் ஆணைக் குழு அழைப்பு விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு மீனவர் நலனை முன்னிறுத்தியே அமைச்சர் டக்ளஸ் செயல்பட வேண்டும்!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

யாழ்ப்பாணம், பெப். 17

**"தற்போது இந்திய அரசாங்கம் இலங்கைக்கு நிதியுதவி செய்கின்றது என்பதற்காக, வடபகுதி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதை அனுமதிக்க முடி யாது" என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என். இன்பநாயகம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடற்றொழில் அமைச்சர் எடுத் துள்ள தீர்மானத்தை கண்டும் காணாமலும் இருந்தால் அது வடக்கு - கிழக்கு மக்களுக்கு செய்யும் துரோகமாகவே அமையும். குறுகிய நோக்கங்களுக்காக குழு வாதங்களை விடுத்து மீனவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எடுத்துள்ள தீர்மானத்தை அமைச் சர் மீள் பரிசீலனை செய்யவேண் டும். வடபகுதி மக்களின் நலன் களை கருத்தில் கொண்டே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முடிவுகளை எடுக்கவேண்டும்" என்றார். (ஐ)

# சரத் பொன்சேகா எம். பியை போர்த்துக்கல் அனுப்ப நேரும்!

## விக்னேஸ்வரன் எம். பி.

கொழும்பு, பெப். 17

சரத் பொன்சேகாவை போர்த் துக்கல்லுக்கு அனுப்ப வேண்டி நேரி டும் என தமிழ் மக்கள் தேசிய கூட் டணியின் பாராளுமன்ற உறுப்பி னர் சி. வி. விக்னேஸ்வரன் கூறினார்.

சமஷ்டி கோருபவர்களை லண் டனில் போய் கோருமாறு சரத் பொன்சேகா வெளியிட்ட கருத் துக்கு பதிலளிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

எங்களை லண்டனுக்கு போக சொன்னால் அவரை நாங்கள் போத்துக்கல்லுக்கு அனுப்ப வேண்டி வரும். பொன்சேகா என் பது சிங்கள பெயருமல்ல தமிழ் பெயருமல்ல. சமஷ்டி கோருபவர் களை லண்டன் போக சொன்னால் நாங்கள் அவரை போர்த்துக்கல் லுக்கு போகுமாறு கோர வேண்டி வரும் - என்றார். (ஐ-03)

# நேற்று முதல் மின்வெட்டு இல்லை!

கொழும்பு, பெப். 17

நேற்று வியாழக்கிழமை முதல் மின்வெட்டு அமுல் படுத்தப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதன் பின்ன ணியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மின் கட்டணத்தைச் செலுத்துவதில் நிதி நெருக் கடியை எதிர்கொள்பவர்கள் தொடர்பில், நிதி அமைச்சு எதிர்காலத்தில் தீர்மானிக்கும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் 66 சதவீதத்தால் மின்சாரக் கட்டணம் அதிகரிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எப்போதும் துணை நிற்பதாக உறுதியளித்துள்ளது இத்தாலி!



கொழும்பு, பெப். 17

கடினமான காலங்களில் இலங்கைக்கு எப்போதும் துணை நிற்கும் என இத்தாலி உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வுடனான சந்திப்பின்போதே, இத்தாலியின் பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் மொரிசியோ லியோ இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை விரைவாக மீட் டெடுப்பதற்கு இத்தாலி எப்போதும் துணை நிற்கும் என வும் அவர் உறுதியளித்துள்ளார். (அ)

# அரசிடம் மாற்று வழி ஏதும் இல்லை அதனாலேயே மின் கட்டண உயர்வு



கொழும்பு, பெப். 17

இலங்கையில் நேற்று முதல் மின்வெட்டு அமுல் படுத்தப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அத்துடன், மாற்று வழிகள் எதுவும் இன்மையா லேயே மின் கட்டணத்தை அதிகரிக்க நேரிட்டது என வும், மின் கட்டண அதிகரிப்பால் சர்வதேச நாணய நிதி யத்துடனான பேச்சு சாதகமாக முடியுமென நம்புவதா கவும் அவர் கூறினார். (அ)

# 12 மாவட்டங்களில் டெங்கு அபாயம்!

கொழும்பு, பெப். 17

12 மாவட்டங்களில் டெங்கு அபாய நிலைமை காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் உள்ள டங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களும் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை 3,637 டெங்கு நோயாளர் கள் பதிவாகியுள்ளனர். (அ)

# இந்திய வீடமைப்பு திட்டம் தொடர்பாக கலந்துரையாடல்!

கொழும்பு, பெப். 17

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின்கீழ் மலையகத்தில் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட் டம் சம்பந்தமாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல் நடை பெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற இந்த கலந்துரை யாடலில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மூவர் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், திட்டமி டல் பிரிவு அதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோ ரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

மலையக மக்களுக்காக இந்தியா வழங்கிய 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் சில பகுதிகளில் வீடமைப்புத் திட்டம் இன்னும் முழுமைப்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றைப்பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், இலங்கையின் தற்போதைய பொருளா தார சூழ்நிலைக்கமைய, முன்னதாக மதிப்பீடு செய்யப் பட்டதன் பிரகாரம் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாதநிலை காணப்படுவதால் மேலதிகமாக தேவைப்படும் உதவிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

முதலில் 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முழுமைப் படுத்திய பின்னர், 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆரம் பிப்பது சம்பந்தமாகவும், பயனாளிகள் தேர்வு குறித்தும் இச்சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது. (ஐ)

# புற்றுநோய் மருந்து வழங்க இலஞ்சம் பெற்றவர் மறியலில்!

கொழும்பு, பெப். 17

புற்றுநோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் கார்போபிளாடின் என்ற மருந்தை வழங்குவதற்கு 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றார் என்று கூறப்படும் மஹரகம மருத்துவமனையின் மருந்தாளரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மஹரகம, அம்பகஹபுரவை சேர்ந்த புற்றுநோய் மருத்துவமனையின் மருந்தாளரான மிஸ்க உதயங்க கந்தமுல்ல என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு வழங்கப்படும் கார்போபிளாடின் என்ற மருந்து புற்றுநோய் மருத்துவ மனையில் இல்லை எனவும் தன்னிடம் 20 ஆயிரம் ரூபாய் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமென்றும் நோயாளிகளிடம் கூறியுள்ளார்.

இதன்படி, மஹரகம பிரதேசத்தில் சந்தேக நபரிடம் இருந்து குறித்த முறைப்பாட்டாளர் மருந்தைப் பெற்றுக்கொண்டபோது இலஞ்ச ஆணைக்குழுவின் முகவர் முன்னிலையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்தது.

# நேருக்கு நேர் மோதி பேருந்துகள் விபத்து!

## நால்வர் காயம்

ஹற்றன், பெப். 17

இ.போ.ச. - தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கினிகத்தனை - பெரகஹமுல பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

கண்டியிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த பயணித்த இ.போ.ச. பேருந்து பயணிகள் இறங்கும்பொருட்டு பெரகஹமுல பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது.

அந்த சமயம், கொழும்பிலிருந்து ஹற்றன் பயணித்த மற்றுமோர் இ. போ. ச. பேருந்து நிறுத்திவைக்கப் பட்டிருந்த பேருந்தை விட்டு விலகி முன்னே பயணித் தது. அப்போதே, எதிர் திசையில் ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த நால்வரும் சிகிச்சைக் காக கினிகத்தனை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் இ. போ. ச. பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.